Regd. No. M. 4593. "KUDI ARASU" 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி [illegible] ரூ 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மாலை 17 } ஈரோடு, 2-9-1944 ஆவணி-மீ 18உ { மலர் 47

# S. I. L. F. (ஜஸ்டிஸ்) மாகாண மாநாடு

## சேலம் கண்டிராத காட்சி

### ஊர்வலத்தில் 30000 பேர்

### உயிருக்குத் துணிந்த வீரத்தொண்டர்கள் 5000 பேர்

### 40 குதிரைகள், 2 யானைகள், 4 சக்கர இரட்டைக் குதிரை சாரட்டில் தலைவர் ஊர்வலம்

டஜன் கணக்கான கார்கள் பின்னால் தொடர்ந்து விடப்பட்டன

புதிய உடையுடனும் கொடியுடனும் 300 தொண்டர்கள்

5 ஜதை பாண்டு, 10 ஜதை மேளம், 100 தப்பட்டை, 40 கொம்புகள்

பெரியார் வாழ்க, திராவிடநாடு திராவிடருக்கே, திராவிடர் கழகம் ஓங்குக, பாண்டியன் வாழ்க, துரோகிகளும் சதிகாரர்களும் அயோக்கியர்களும் ஒழிக, அழிக என்ற உற்சாகக்குரல்கள் மேகம் கலைந்தலையும்படி ஒலிக்கப்பட்டன

(நமது நிருபர்)

16-வது தென்னிந்திய நல உரிமைச் சங்க மாநாடு சேலத்தில் நடத்த 1940ம் வருஷத்திலேயே திருவாரூரில் அழைக்கப்பட்டது. அதன்பிறகு 43ல் சேலத்தில் நிர்வாகசபை கூட்டம் போட்ட காலத்தில் சேலம் சேர்மன் தோழர் ரத்தினம் பிள்ளையவர்களாலும் குகை பிரபல வியாபாரி கே. ஜெகதீசன் அவர்களாலும், வக்கீல் தோழர் செட்டோ அவர்களாலும் அழைக்கப்பட்டபடி ஒரு வருஷகாலமாக சேலத்தில் நடத்த முயற்சி எடுத்து வந்த மாநாடு 27-8-44 ஆந்தேதி சேலம் விக்டோரியா மார்க்கட்டில் போடப்பட்டிருந்த மாபெரும் கொட்டகையில் ஆடம்பரத்தோடும் ஆரவாரத்தோடும் உற்சாகத்தோடும் உவப்படியான வேலைத்திட்டங்களோடும் வெற்றிகரமாக நடந்த விபரம்:

### பெரியார் வருகை

மாநாட்டுக்கு முதல் நாளாகிய 26ஆம் தேதியே தோழர்கள் சௌந்தரபாண்டியன், அண்ணாதுரை, வி. வி. ராமசாமி, கே. எ. பி. விசுவநாதம் ஆகியவர்களும் பல இடங்களிலிருந்து சுமார் ஆயிரம் பிரதிநிதிகளும் வந்து விட்டனர். அடுத்த நாள் காலையில் மாநாட்டுத் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களும் மற்றும் சுமார் 3000 பிரதிநிதிகளும் தமிழ் நாட்டிலுள்ள எல்லா ஜில்லாக்களிலிருந்து வந்து கூடிவிட்டார்கள். பெரியார் ஏறிவந்த ரயில் வந்த உடனே ரயில் மேடையில் கொடியுடன் சுமார் 200 தொண்டர்களும் 400, 500 உள்ளூர் மக்களுமாக பெருத்த ஆரவாரத்தோடு பெரியாரை வரவேற்று அவருக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தோழர் ரோச அருணாசலம் அவர்கள் மாளிகைக்கு வாழ்த்தொலியோடு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு சென்று சிற்றுண்டி அருந்தியதும் தோழர் பாண்டியன் அவர்களும் தோழர் அண்ணாதுரையவர்களும் தலைவர் இருந்த ஜாகைக்கு வந்து தீர்மானங்களைப்பற்றி பேசி 'குடி அரசு' 'திராவிடநாடு' பத்திரிகைகளில் வெளிவந்த தீர்மானங்களில் பட்டம் பதவி விடுதல் என்ற தீர்மானங்கள் தவிர மற்ற தீர்மானங்கள் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறதென்றும் தெரிவித்ததோடு பட்டம் பதவி விடுகிற தீர்மானத்திலும் ஒரு சிறு திருத்தத்தோடு அதை அப்படியே ஒப்புக்கொள்வதில் யாருக்கும் எவ்வித ஆட்சேபணையில்லையென்றும் தெரிவதாகவும் தெரிவித்ததோடு இத்திருத்தத்தோடு எல்லாத் தீர்மானங்களும் மாநாட்டில் நிறைவேற்றும் விஷயத்தில் யாவரும் கட்டுப்பாடாக ஒருவருக்கொருவர் ஒத்துழைக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

பிறகு மாநாட்டுக்கு ஊர்வலம் துவக்க ஏற்பாடு செய்ததும், பாண்டியன் அவர்கள் இறங்கியிருந்தமான முனிசிபல் சத்திரத்திற்கு வரவேற்புக் கழகத் தலைவராலும் காரியதரிசியாலும் தலைவர் அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து தலைவர் ஊர்வலம் துவக்கப்பட்டது.

### ஊர்வலப் புறப்பாடு

ஊர்வலத்தில் இரட்டைக் குதிரை பூட்டிய பெரியதொரு கோச்சு வண்டியில் பெரியார், பாண்டியன், வரவேற்புக் கழகத் தலைவர் மூவரும் மாலையிட்டு அமர்த்தப்பட்டனர். பிறகு மாநாட்டுத் திறப்பாளரும், கொடியேற்றுபவருமாகிய தோழர்கள் கே. எ. பி. விசுவநாதம், பி. பாலசுப்பிரமணியம் ஆகியவர்களும் வண்டியில் உட்காரவைக்கப்பட்டார்கள். அந்த சமயத்தில் பொது ஜன[illegible] பலர் ஆட்சேபணைக் குறிகள் காட்டினார்கள் என்றாலும் பெரியார் கேட்டுக் கொண்டதின் பேரில் ஆட்சேபணை குரல்கள் அடங்கிவிட்டன. ஊர்வலத்திற்கு தொடங்கிய இடத்திலேயே சுமார் 20000 மக்கள் பேரல் கூடிவிட்டார்கள். கோச்சு

வண்டிக்கு முன்னால் ஜனங்கள் ஒரு பர்லாங்கு தூரம் வரையிலும் நெருக்கமாக நிறைந்திருக்க, 5-ஜதை பாண்டு செட்டுகளும், 10 ஜதை மேளம், 100 ஜதை தப்பட்டை, 40 கொம்புகளும், தொண்டர்கள் ஏறிய 40 குதிரைகளும், 2-யானைகளும் முன்செல்ல, 10½ மணிக்கு ஊர்வலம் புறப்பட்டது.

ஊர்வலம் புறப்பட்டு கடைவீதிக்குள் வருவதற்குள் ஊர்வலத்தில் கலந்துகொண்ட ஜனங்களின் எண்ணிக்கை ஒன்றுக்கு இரண்டுபங்காய்விட்டது. இதில் முக்கிய குறிப்பிடத்தக்கது பெண்கள் ஆயிரக்கணக்கில் ஊர்வலத்தில் கலந்துகொண்டதும், திருச்சி, பொன்மலை முதலிய ஊர்களிலிருந்து வந்த தொண்டர்படைகள் தங்கள் தங்கள் கொடி சின்னங்களுடன் தனித்தனியாக அணிவகுத்துச் சென்றதுமாகும். ஊர்வலத்தில் வழிநெடுக மாலையிட்டார்கள். தஞ்சாவூர் திராவிட சுயமரியாதைத் தோழர்களால் "பெரியாரே எங்கள் தலைவர்" என்றும் 'சூழ்ச்சியாவும் வீழ்ச்சியடைக' என்றும் பொறிக்கப்பட்டதுண்டுப்பிரசுரங்கள்பதினாயிரக்கணக்கில் வழங்கப்பட்டன வழிநெடுக பெரியார் வாழ்க, திராவிடர்கழகம் ஓங்குக, பாண்டியன் வாழ்க, துரோகிகளும் சதிகாரிகளும் அயோக்கியர்களும் ஒழிக என்ற உற்சாகக் குரல்கள் காது செவிடுபடச் செய்தன. ஊர்வலம் சுமார் 11½ மணிக்கு மாநாட்டுக் கொட்டகையை வந்தடைந்தது. ஊர்வலம் வருவதற்கு முன்னமேயே கொட்டகையில் ஆயிரக்கணக்கான பேர்கள் நிறைந்திருந்தார்கள். தோழர் அண்ணாதுரை அவர்கள் மாநாட்டுக் கொட்டகையில் நுழைந்தபோது பெருத்த ஆரவாரம் செய்தார்கள். பெரியார் அவர்கள் பெரும் கஷ்டத்துடன் பெரும் கரகோஷத்தினிடையே மேடைக்கு அழைத்துவரப்பட்டார்கள்.

### கூர்க்க சிப்பாய்கள் நீக்கம்

பிரதிநிதிகள் தியாகராயப் பந்தலுக்குள் நுழைவதில், கொட்டகை வாயிலில் கேப்பாளத்திய கூர்க்க சிப்பாய்களை வைக்கப்பட்டிருந்ததில், அவர்களோடு சச்சரவு ஏற்பட்டதும் அதன் பயனாய் பெருத்த கலவரம் ஏற்பட்டதுடன் உயிர்க்கொலையும் ஏற்படும்படியான அளவுக்கு ஆத்திரம் ஏற்பட்டு விட்டது. தோழர் அண்ணாதுரை அவர்களின் அதிதீவிர முயற்சியினால் குழப்பம் ஒரு வழியில் அடக்கப்பட்டது. கூர்க்கக் காவலாளிகள் எல்லாம் அப்புறப்படுத்தப்பட்டார்கள். இது கொட்டகைக்குள் பிரதிநிதிகளை தாராளமாகச் செல்ல விடாமல் தடுப்பதற்காக செய்யப்பட்ட தந்திரம் என்று பலருக்கு தோன்றியதாலேயே பிரதிநிதிகள் வெறிகொண்டுவிட நேர்ந்தது என்று தான் சொல்லவேண்டும். அதன் பயனாக மாநாட்டைக் கூட்டியவர்களுக்கும் பழியேற்பட நேர்ந்தது.

### கொடியேற்றல் பிரதிநிதிகள் ஆட்சேபணை

மாநாடு கூடினதும் மாநாட்டுக் காரியதரிசி தோழர் நெட்டோ அவர்கள் தோழர் பாலசுப்ரமணியம் அவர்களை கொடியேற்றிவைக்கும்படி பிரேரேபித்தார். சொன்ன உடனே பிரதிநிதிகள் கூட்டத்தில் இதில் எழுத முடியாத பலவிதமாக கெட்ட வார்த்தைகளும் மறுப்பு ஆட்சேபணைகளும் கிளம்பின. உடனே வரவேற்புக் கழகத் தலைவர் சேர்மன் தோழர் ரத்தினம் பிள்ளை வந்து சமாதானமாக இந்த மாநாட்டின் பலனாய் நம் கட்சியில் ஒரு சின்ன மனிதனுக்குஆவது எவ்வித அபிப்பிராய பேதத்திற்கும் சிறிதும் இடமில்லாமல் எல்லோரும் ஒன்றுசேர வேண்டுமென்று எல்லோரையும் அழைத்திருக்கிறோமேயல்லாது மற்றப்படிவேறு எந்தவிதமான எண்ணங்கொண்டும் நாங்கள் தோழர் பாலசுப்பிரமணியம் முதலியவர்களை தருவிக்கவில்லை என்றும் அவர்கள் மிக்க ஒழுங்காகப் பேசி நேர்மையாக நடந்து கொள்வார்களென்றும் சொல்லி கொடியேற்றுவதை ஆதரித்தார். பெரியார் அவர்களும் ஆத்திரப்பட்டவர்களுக்கெல்லாம்கையமர்த்தி கேட்டுக்கொள்வதின் மூலம் சமாதானம் சொல்லி யாதொரு கலவரமும் இல்லாமல் இருக்கும்படி வேண்டிக்கொண்டார்.

பிறகு தோழர் பாலசுப்பிரமணிய முதலியார் சிறிது நேரம் ஆங்கிலத்தில் பேசினார். (அது பின்னால் வரும்) பேச்சு முழுவதும் சரணாகதி பேச்சாகவும் தன்னுடைய நடவடிக்கைக்கு மன்னிப்புக் கேட்டுக்கொள்வதாகவும், தானும் தன் பின் சந்ததியும் என்றென்றும் பெரியார் தலைமையில் தொண்டாற்றுவோம் என்றும், "நான் பெரியாருக்கு ஓய்வுகொடுப்பதற்கு ஆவே வேறு எந்தெந்த ஆள்களுடைய பெயர்களை தலைமை ஸ்தானத்திற்கு குறிப்பிட்டேனோ அவர்கள் எல்லாம் குறிப்பாக சர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார் முதலியவர்கள் எல்லாம் கட்சிக்கு "துரோகிகளாய் விட்டார்கள்" என்றும், 'பெரியார் தமிழ்நாட்டின் காரல்மார்க்ஸ்" என்றும் ஏகாளமாகப் புகழ்ந்து பேசியதோடு "அவரிடத்தில் நான் குறை கண்டதாக சொல்வதெல்லாம் இன்னும் அதிகமாக வேலை செய்யவேண்டும் என்று ஊக்கப்படுத்தவேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டே"யென்றும் வேறு எந்தவிதமான குறை அவரிடத்தில் கண்டதில்லையென்றும் சொன்னதோடு "பெரியாரே என்றென்றும் தலைவராயிருந்து திராவிடஸ்தான் வாங்கிக் கொடுத்து அதில் அவரே முதல் பிரசிடெண்டாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறேன்" என்றும் அதற்காக தாம் எல்லாவிதமான தியாகங்கள்செய்யத் தயாராயிருப்பதாகவும் தெரிவித்தார். மற்றும் தோழர் பாலசுப்பிரமணியம் அவர்கள் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க சங்கதி என்னவென்றால், ஊர்வலத்தில் பெரியாருடன் வண்டியில் உட்கார்ந்திருக்கும் போது தோழர் பாலசுப்பிரமணியத்துக்கு போடுவதற்காகக் கொண்டுவந்த மாலைகள் எல்லாவற்றையும் இரண்டு கையில் வாங்கி எழுந்திருந்து பெரியாருக்கு அணிவித்து பொது மக்களுக்குத் தான் பெரியாரின் அடிமை என்பது போல் காட்டிக் கொண்டதாகும். தோழர் பாலசுப்பிரமணியம் அவர்கள் பேச்சு ஆங்கிலத்தில் முடிந்த உடனே, தோழர் க. அன்பழகனால் அது தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

### திறப்பு விழா

பின் மாநாட்டைத் திறந்துவைக்கும்படி தோழர் கே. ஏ. பி. விசுவநாதத்தைக் கேட்டுக் கொண்டார்கள். தோழர் விசுவநாதம் அவர்கள் பேச எழுந்தபோதும் சிறிது எதிர்ப்புக் குறி காணப்பட்டதென்றாலும் அது உடனே பெரியார் செய்கையால் அடக்கப்பட்டது. தோழர் விசுவநாதம் அவர்கள் பேசியதும், சற்றேறக்குறைய தோழர் பாலசுப்ரமண்யம் பேசியது போலவேயிருந்தாலும் பெரியார் சர்வாதிகாரியாய் இருப்பதைக்கூடத் தான் ஆதரிப்பதாகவும் பேசி சாமர்த்தியமான முறையில் சாடைமாடையாக சில கிண்டல் சொல்லையும் சொல்ல ஆசைப்பட்டார். கூட்டத்திலுள்ளவர்களில் சில பிரதிநிதிகள் ஒருமையில் பேசி எச்சரிக்க ஆரம்பித்தவுடன் மறுபடியும் பெரியாருக்குப் புகழ்மாலை சூட்டுவதில் முனைந்துவிட்டார்.

அது முடிந்ததும் வரவேற்புக் கழகத் தலைவர் சேர்மன் தோழர் ரத்தினம் பிள்ளையவர்கள் வரவேற்புச் சொற்பொழிவை நிகழ்த்தினார். அது பெரும்பாலும் பெரியாரைப் புகழ்ந்தும் அவரைத் தவிர வேறு தலைவர் திராவிடர்களுக்கு கிடையாதென்றும் ஒற்றுமையை வலியுறுத்தியும் திராவிடநாட்டுப்பிரிவினையை ஆதரித்தும் கட்சிக் கட்டுப்பாடுகளை வலியுறுத்தியும் பேசப்பட்டதாகும். பின்னர் பெரியார் அவர்களைத் தலைமை வகிக்கும்படி பிரரேபித்தார்.

தோழர்கள் நெட்டோ, பாண்டியன், ராமாமிர்தத்தம்மாள், ராவ்சாகிப் துரைசாமி பிள்ளை, கணேசசங்கரன், திருவத்திபுரம் டி. சண்முகம் ஆகியவர்கள் ஆத

(தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க)

# சேலம் மாநாடு

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

## பிற்பகல் நடவடிக்கை

## நிறைவேறிய தீர்மானங்கள்

## ஜஸ்டிஸ் கட்சியின் பெயர் மாற்றம்

### அரசியல், சமுதாய சீர்திருத்தம்

பிற்பகல் மாநாடு பெரியார் தலைமையில் மாலை 3 மணிக்கு கூடியது. ஜஸ்டிஸ் கட்சியின் பெயரை அதாவது தென் இந்திய நலவுரிமைக் கழகம் என்பதை திராவிடர் கழகம் என்பதாக மாற்றவேண்டும் என்ற தீர்மானம் (முழு விபரம் வேறு இடத்தில் காண்க) தோழர் அண்ணாதுரை அவர்களால் பிரரேபிக்கப்பட்டது. தோழர் டி. ஷண்முகம் அவர்கள் ஆமோதித்தார். இத்தீர்மானத்தைத் தோழர்கள் சி. ஜி. நெட்டோ, அ. கணேசசங்கரன், எ. வேணுகோபால் ஆகியவர்கள் விஷயாலோசனைக் கூட்டத்தின் அனுமதித்து விட்டு "போதுமான கால நோட்டீஸ் கொடுக்கப்படவில்லை" யென்பதாக ஆட்சேபித்தார்கள். தலைவர் பெரியார் எழுந்திருந்து 'ஜஸ்டிஸ்' என்பது பத்திரிகையின் பெயர் என்றும், இக்கட்சியின் பெயர் தென்னிந்திய நல உரிமைச்சங்கம் என்பதாகவும், சேலத்தில் 26-11-43-ல் கூடிய நிர்வாகசபைக் கூட்டத்தில்—(இவர்களும் கூடியிருந்த நிர்வாகசபைக் கூட்டத்திலே,) ஜஸ்டிஸ் கட்சி என்றிருப்பதை 'திராவிடர் கழகம்' என்பதாக மாற்ற வேண்டுமென மாகாண மாநாட்டுக்கு சிபார்சு செய்திருப்பதாகவும் மற்றும் பல சங்கங்கள் ஆதரித்திருப்பதாகவும் தென் இந்தியர் என்றாலும் திராவிடர் என்றாலும் ஒன்றுதான் என்றுந் தெரிவித்தார். பின்னர் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டது. ஆயிரக்கணக்கான கைகள் உயரத் தூக்கின. ஆட்சேபிக்கிறவர்களை கைதூக்கும்படி கேட்கப்பட்ட போது, யாரும் கைதூக்கவேயில்லை. ஆட்சேபித்தவர்களும் சும்மா இருந்துவிட்டார்கள். எனவே தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பின்னர் சமுதாய சீர்திருத்த சம்பந்தமான தீர்மானங்கள் தலைமை [illegible] தாக ஒப்புக்கொள்ளப்பட்டன.

அதன் பின் தோழர் அண்ணாதுரை அவர்களின் தீர்மானம் பிரரேபிக்கப்பட்டு ஒரு சிறு திருத்தத்துடன் நிறைவேறியது. (அதன் விபரம் வேறுபக்கத்தில் வருகிறது)

கடைசியாக ஜில்லா தாலுகாக்களில் ஸ்தாபன அமைப்பு வேலைக்கு நான்கு பொறுப்பாளர்களை மாநாடு வேண்டிக்கொண்டதும் தலைவரால் முடிவுரை கூறப்பட்டது.

முடிவாக நகரப் பிரமுகரும் வரவேற்புக் கழக முதியவருமான ராவ்சாஹிப் துரைசாமி பிள்ளை அவர்கள், பெரியார், தோழர்கள் அண்ணாதுரை, பாண்டியன் முதலியவர்களுக்கும் வந்திருந்த பிரதிநிதிகளுக்கும் மாநாட்டை சிறப்புடன் கூட்டித்தந்த வரவேற்புக் கழகத் தலைவருக்கும், முனிசிபாலிட்டியாருக்கும் வந்தனோபசாரம் கூற மாநாடு இனிது முடிந்தது.

இனி பொது ஜனங்கள் செய்ய வேண்டிய வேலையை கவனிக்க வேண்டும். அங்கத்தினர்களைச் சேர்ப்பதும், அமைப்புகளைப் புதுப்பிப்பதும் முக்கியமான வேலையாகும்.

### கட்சி அரசியல் தீர்மானங்கள்

1. (அ) இந்த மாநாடானது ஜஸ்டிஸ்கட்சி என்று அழைக்கப்படும் இக்கட்சிக்கு உள்ள தென் இந்திய நலஉரிமைச் சங்கம் என்ற பெயரை திராவிடர் கழகம் Dravidian Association என்று பெயர் மாற்றத் தீர்மானிக்கிறது.

(ஆ) அதன் முக்கிய கொள்கைகளில் திராவிடநாடு என்ற பெயருடன் நம் சென்னை மாகாணம் மத்திய அரசாங்க நிர்வாகத்தின் ஆதிக்கம் இல்லாததும் நேரே பிரிட்டிஷ் செக்ரட்டரி ஆப் ஸ்டேட்டின் நிர்வாகத்திற்குக் கட்டுப்பட்டதுமான ஒரு தனி ஸ்டேட் நாடாக பிரிக்கப்படவேண்டியது என்ற கொள்கை [illegible] பட்டிருக்கிறது என்று இந்த மாநாடு தீர்மானிக்கிறது.

(இ) திராவிட கழகத்து அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் மேற்கண்ட திராவிடநாடு பிரிக்கப்பட்டு அமைக்கவேண்டும் என்பதை ஒப்புக்கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

### ஜாதி பேதம்

2. (அ) மக்கள் பிறவியினால் ஜாதி பேதம் கற்பிக்கப்பட்டிருப்பதையும் அவற்றன் உயர்வு கற்பிக்கப்பட்டிருப்பதையும் இக்கழகம் மறுப்பதோடு அவைகளை ஆதரிக்கிற, போதிக்கிற, கொண்டு இருக்கிற மதம், சாஸ்திரம், ஸ்மிருதி, புராணம் காவியம் என்பவை முதலிய எவைகளையும் பொதுமக்களும் சிறப்பாக நம் கழகத்தவர்களும் நம்பக் கூடாது என்று தீர்மானிப்பதோடு அவைகள் சம்மீது சுமத்தப்படாமல் இருக்கவேண்டிய காரியம் தீவிரமாய்ச் செய்யவேண்டிய தென்றும் இம்மாநாடு தீர்மானிக்கின்றது.

(ஆ) மேலே கண்ட தன்மைகளை நீதியாகக் கொண்ட அரசியல் சட்டங்களையும் மாற்றி அமைக்க முயற்சிக்க வேண்டும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

(இ) வருணாச்சிரமதர்மம் என்கிற கொள்கையையும் அதன் பேரால் ஏற்படுத்தப்பட்ட பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்கின்ற பிரிவையும் இக்கழகம் ஒப்புக்கொள்ளுவதில்லை என்பதோடு அக்கொள்கைகள் எந்த முறையில் இருந்தாலும் ஒழிக்கப்பட வேண்டியவைகள் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

(ஈ) மனிதனை மனிதன் தீண்டாமை, பார்க்காமை, ஒன்றாயிருந்து உண்ணாமை, தொழுகாமை முதலிய தன்மைகளை ஒழிக்க வேண்டும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

(உ) மக்கள் தங்கள் பெயர்களுக்குப் பின்னால் ஜாதிப்பிரிவைக் காட்டும் சொற்களையும் மற்றும் குறிகளையும் விட்டுவிடவேண்டும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

சமயம் கோவில் மடம்

3. (அ) கோவில்களில் பல கடவுள்கள் தன்மையையும், கடவுளுக்குஉருவத்தன்மையையும் அதற்கு பெண்டுபிள்ளை, பல மனைவி, காதற்கிழத்தி தன்மையையும் அதற்கு திருமணம், ஒய்யாரம், உற்சவம், ஊர்வலம், சதுர்கச்சேரி, பாணவேடிக்கை முதலாகிய ஆடம்பரங்கள் செய்யப்படுவதையும் நிறுத்தப்படவேண்டும்.

(ஆ) தொழுகைக்கும் பூசைக்கும் தரகன் இருப்பதும் தேங்காய், பழம், கற்பூர ஆர்த்தி, நிவேதனம் (படைப்பு) முதலியவைகளுக்கு செலவிடுதலும் ஆகியவைகள் ஒழிக்கப்பட வேண்டும்.

(இ) மடம், மடங்கள் மடாதிபதிகள் என்கின்ற தன்மைகள் மனித நாகரிகத்திற்கும், பகுத்தறிவிற்கும், சுயமரியாதைக்கும் பொருத்தமற்றதாக இருப்பதாலும் அவைகள் இன்றைய நம் வாழ்விற்கும் லட்சியத்திற்கும் வேண்டாததாகவும், விரோதமானதாகவும் இருப்பதாலும் அவைகளால் பெரிதும் ஒழுக்கமோ, உயர்குணமோ, அறிவு வளர்ச்சியோ, சமுதாய ஒற்றுமையோ ஏற்படுவதற்கு இல்லாமல் இருப்பதினாலும் அவற்றின் அடிப்படையை மாற்றி அவைகளை சமுதாய வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் ஒற்றுமைக்கும் பாடுபடும் ஸ்தாபனங்களாக மாற்றவேண்டும்.

(ஈ) கோயில்களிலும், மடங்களிலும் ஏராளமான பொருளும் வருவாய்களும் இருப்பதால் அவைகள் மக்களின் கல்வி, சுகாதாரம், வைத்தியம், விஞ்ஞானம் தொழிற்சாலை, இயந்திரசாலை, கண்காட்சி முதலிய காரியங்களுக்குப் பயன் படுத்தச் செய்யவேண்டும் என்பதாக இம்மாநாடு தீர்மானிக்கின்றது.

பெண்கள்

4. (அ) பெண்களுக்கு ஆண்களைப் போன்ற சொத்து உரிமையையும், இருவருக்கும் கல்யாணரத்து உரிமையையும், கலப்புமண உரிமையையும் அளித்து அவைகள் சட்டமாக்கப்படவேண்டும் என்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

(ஆ) விதவை மணம் ஆதரிக்கப்பட்டு பெருவாரியாக அமுலுக்குக் கொண்டுவரப்படவேண்டுமென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

(இ) திருமணங்கள், பதிவுத் திருமணங்களாகவும், அல்லாவிட்டால் பார்ப்பனப் புரோகிதம், ஆடம்பரம், வீண் சடங்கு இல்லாததாகவும், அவசியமானால் ஒரு நாள், ஒரு விருந்துக்கு மேல் இல்லாமலும் நடத்தப்பட வேண்டும் என்று இம்மாநாடு தீர்மானிக்கின்றது.

கல்வி

5. (அ) கல்வியானது அறிவு வளர்ச்சிக்கும் புலமைக்குமே தவிர மதப்பிரசாரத்திற்காக அல்ல என்பது கல்வியின் அடிப்படைத் தத்துவமாக இருக்கவேண்டும்.

(ஆ) பகுத்தறிவுக்கு மாறானதும் மூட நம்பிக்கையை வளர்ப்பதுமான எந்த விஷயங்களும் கல்வியில் பாடமாகவோ பாடபுத்தகமாகவோ கற்பிக்கப்படுவதாகவோ இருக்கக்கூடாது.

(இ) கல்வி கற்பிக்கப்படுவது என்பதானது யாவருக்கும் பொதுவானாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் தொழிலாளிகளுக்கும் பிற்பட்ட வகுப்பாருக்கும் முதல் உரிமை அளிப்பதாக இருக்கவேண்டும்.

(ஈ) சாதாரணவாழ்க்கைத்தேவைக்கும் சாதாரண அறிவு தன்மைக்கும் மேற்பட்டதான கல்விமுறை பொதுக்கல்வியாக செய்யப்படாமல் எல்லா மக்களுக்கும் எண், எழுத்து, வாசிப்பு இருக்கும்படியான அளவு கல்வி, பொது இலவச கட்டாயக் கல்வி முறையாக இருக்கவேண்டும்.

(உ) அரசியல் நிர்வாகத் தேவைக்கு மேற்பட்ட கல்வியின் பொறுப்பையும் உயர்தரக் கல்வி என்று சொல்லப்படுவதின் பொறுப்பையும் சர்க்கார் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பதோடு பொது நிதியில் இருந்து அவைகளுக்கு செலவழிக்கவும் கூடாது, என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

விவசாயம்

6. (அ) விவசாய முறை.

(ஆ) நீர் பாய்ச்சல் வசதி.

(இ) தனிப்பட்ட மக்களுக்கு நில அடைப்பு (தர்க்காஸ்து) ஆகிய இவைகளுக்கு ஒரு தனிப்பட்ட இலாகா ஏற்படுத்தி இவற்றை ஒரு தொழில் முறையாக நடத்தவேண்டும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

தொழிலாளி

7. தொழிலாளிகளுக்கு இலாபத்தில் பங்கும் அப்பங்கை முதலீட்டுப் பங்குடன் சேர்க்கப்படவும் வேண்டும்.

மற்றவை, இண்டியன் கட்சிக்குப் பெரியார் அளித்த திட்டம் என்பவைகளை ஜஸ்டிஸ் கட்சி முன்பே ஒப்புக்கொண்டிருப்பதை இம்மாநாடு ஏற்றுக்கொள்ளுகிறது.

ஒழுங்குமுறை

8. (அ) நம் கட்சிக்கு ஒழுங்குமுறை நடவடிக்கை எடுத்துக் கொள்ளத்தக்க பாதுகாப்பு இருக்க வேண்டியது அவசியம் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

(ஆ) அதற்கு ஏற்ற காரியங்கள் செய்ய தலைவரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

## அண்ணாதுரை தீர்மானம்

"9. கால நிலையையும், உலகப் போக்கையும், சர்க்கார் நிலைமையையும், நம் மக்கள் தன்மையையும், இதுவரை நாம் நடந்து வந்ததன் மூலம் ஏற்பட்ட அனுபவத்தையும், அதனால் உண்டான பலனையும் மற்ற ஸ்தாபனங்களுக்கும், சர்க்காருக்கும் இருந்து வரும் நிலைமையும், அதனால் அவைகளுக்கு ஏற்பட்ட பலனையும் நன்றாக ஜாக்கிரதையாக ஆலோசித்துப் பார்த்தால் நம் சமுதாயத்தின் எதிர்கால நலனைக் கோரியும், நம் கட்சியின் நன்மானத்தைக் கோரியும் நமது கட்சியின் போக்கு இதுவரை நமக்கும் சர்க்காருக்கும் இருந்து வரும் போக்கை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டிய நிலைமைக்கு நாம் தள்ளிக் கொண்டு போகப்பட்டுவிட்டோம்.

அதாவது,

நம் கட்சி தோன்றிய காலம் முதல் இதுவரை நாம் பிரிட்டிஷ் சர்க்காருடன், ஒத்துழைத்து வந்ததும், சர்க்காருடன் ஒத்துழையாமை செய்து சர்க்காருக்கு தொல்லை கொடுத்து வந்த ஸ்தாபனங்களை எதிர்த்துப் போராடி சர்க்காருக்கு அனுகூலமான நிலைமையை உண்டாக்க உதவி செய்து வந்ததும், குறிப்பாக சென்ற ஐந்து வருஷ காலமாக நடந்துவரும் உலக யுத்தத்தில் நல்ல நெருக்கடியில் நேசநாடுகளின் வெற்றிக்கு கேடு உண்டாகும்படியான நிலையில் நம் நாட்டில் பல ஸ்தாபனங்கள் செய்து வந்த பெருங் கிளர்ச்சிகளையும் நாசவேலைகளையும் எதிர்த்து அடக்குவதிலும் நேசநாடுகளுக்கு வெற்றி உண்டாக பணம், ஆள், பிரசாரம் முதலியவைகள் நிபந்தனை

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

## சேலம் மாநாடும் எதிரிகளின் கையாளும்

(தோழர் எஸ். வி. லிங்கம் எழுதுவது)

ஆறு ஆயிரம் பிரதிநிதிகளும், 600 வரவேற்புக் கழக அங்கத்தினர்களுடன், மாநாடு சிறப்பாக கூடியது, தலைவர் டபுள்யு. பி. ஏ. சௌந்திரபாண்டியன் போன்றார் மாநாடு சிறப்பாக நடைபெறுவதிலும், எதிர்கால வேலைகள் நடைபெற வேண்டியதற்கு தக்க முறையில் ஒத்துழைத்தார்கள்.

உள்ளூரில் ஜஸ்டிஸ் கட்சியில் இரண்டு பிளவு உண்டாக்கி, அச்சண்டையில் உயிர்வாழ சிலர் எண்ணினார்கள். இவர்கள் எண்ணியபடி எதுவும் மாநாட்டில் நடைபெறவில்லை. எனது மதிப்பிற்குரிய நண்பர்கள் பி. ரத்தினசாமி உள்பட சிலர் கையெழுத்து ஓர் அறிக்கை வெளியிட்டதைப் பார்த்தேன். அவர்கள் செய்கைக்கு வருந்துகிறேன். ஆறு, ஏழு ஆயிரம் பேர்களுக்கு முன்பும், தோழர் டபுள்யு. பி. ஏ, சவுந்திரபாண்டியன் அவர்களுக்கு முன்புமே சகல தீர்மானங்களும் நிறைவேறின. தோழர்கள் பி. ஜி. செட்டோ, பி. ரத்தினசாமி, ஏ. கணேச சங்கரன் ஆகியவர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை என்பது அவர்கள் அறிக்கையிலிருந்து தான் தெரிகிறது.

1. சகல தீர்மானங்களும். 6 ஆயிரம் பேர்கள் முன்பு இரண்டு மணி நேரம் நடந்த விசய ஆலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானங்களே மாநாட்டிலும் நிறைவேற்றப்பட்டது.

2. தீர்மானங்கள் முன்னதாகவே இவர்களுக்கு அனுப்பப்பட்டது.

3. மாநாட்டு முடிவு, தலைவர் முடிவுரையுடன் முடிந்தது என்பதே முறை. ஆனால் வந்தனோபசாரம் இல்லாததால் மாநாடு ஒத்தி வைத்ததாக அர்த்தம் என்று சட்டம் தெரிந்த இரண்டு காரியதரிசிகள் சொல்லுகிறார்கள். அதுவும் உண்மைக்கு நேர்மாறாக இராவ் சாகிப் எஸ். துரைசாமி பிள்ளை அவர்கள் பெருத்த கைதட்டலுடன் எழுந்து வந்தனோபசாரம் சொன்னார்கள்.

4. அடுத்த வாரம் கூடும் வரவேற்புக் கழகக் கூட்டம் இனி நடக்கவேண்டியதைப்பற்றி முடிவு செய்யும்.


இரண்டாம் போர்முனை!
மூன்றும் போர்முனை!!
நான்காம் போர்முனை!!!
ஐந்தாம் போர்முனை!!!!

★

அவர்கள் கோருவது
சௌகரியங்கள்

ஆகவே
அவைகளுக்கு அதிகப்
பணம் தேவை

★

மே. த. கவர்னர்
யுத்த நிதிக்கு
தாராளமாக பணம் கொடுங்கள்


## 16-வது மாகாண ஜஸ்டிஸ் மாநாட்டின் வரவேற்புக் கழகக் கூட்டம்

விளம்பர அதிகாரி எம். ஆர். சித்தையன் எழுதியது.

செப்டம்பர் மீ 2-வது வாரத்தில் சு. ம. சங்கக் கட்டிடத்தில் தெ. இ. ந. உ. சங்க மாநாட்டின் வரவேற்புக் கழகக் கூட்டம் நடைபெறும். சகல வரவேற்புக் கழக அங்கத்தினர்களும் தவறாது வரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

வரவேற்புக் கமிட்டியார்,
சேலம்.

## கரூர் சு. ம. மாநாடு

ஷை மாநாடு கரூர் அம்பிகை டாக்கீசில் 24-9-44ல் நடைபெறும்.

தலைவர்: தோழர் சி.என். அண்ணாதுரை M. A.,

பெரியார் முதலிய பலர் கலந்து கொள்வார்கள்.

## குளித்தலை திராவிடர் இளைஞர் மாநாடு

ஷை மாநாடு 17-9-44ல் குளித்தலையில் நடைபெறும்.

மாநாட்டுத் தலைவர்: பழைய கோட்டை இளையகுமாரர் தோழர் ந. அர்ச்சுனன் அவர்கள்.

மாநாட்டுத் திறப்பாளர்: பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள்.

மற்றும் பல தோழர்கள் முக்கிய பணி ஆற்றுவார்கள்.

குடி அரசு

1944-வருடம் செப்டம்பர்-மீ 2-உ

# சேலம் மாநாடு

ஜஸ்டிஸ் கட்சி மாகாண மாநாடு 27-8-44-ஆம் தேதி சேலத்தில் விமரிசையாய் நடந்து வெற்றிகரமாய் பல தீர்மானங்களை நிறைவேற்றி இருக்கிறது.

சேலத்துக்கு மாநாட்டை அழைத்தவர்கள் எதிரிகள் வயப்பட்டு கட்சியின் பேரால் மக்களை மிரட்டியும், ஏமாற்றியும் பிழைக்கும் சில மக்களுக்கு ஆளாகி மாநாடு நடத்தாமல் விட்டுவிட முயற்சித்தார்கள் என்றாலும் சேலம் மகாஜனங்களுக்கு இருந்த ஆர்வத்தால் மாநாடு நடத்தத் தீர்மானிக்கவும் வரவேற்புக் கழகம் அமைக்கவும் நிதி திரட்டவும் ஆன காரியம் செய்யப்பட்டு விட்டது. இக்காரியத்தை மாநாடு நடத்தப் பயன்படுத்தாமல் மாநாடே எங்கும் நடக்காதிருக்கப் பயன்படுத்தி அதாவது தானும் நடத்தாமல் வேறு ஒருவரையும் நடத்தவிடாமல் முட்டுக்கட்டை போட பயன் படுத்தப்பட்டு வந்தது.

இந்த நிலையில் கட்சித் தலைவர் வரவேற்புத் தலைவரைக் கண்டு மாநாட்டைப் பற்றி கேட்கும்போதெல்லாம் "நடத்திவிடலாம்" என்று சொல்லுவதும் கட்சி பொதுக் காரியதரிசி தோழர் அண்ணாதுரை வரவேற்புக் காரியதரிசியைக் கண்டு கேட்கும் போது "மாநாடு எதற்கு? ஜஸ்டிஸ்கட்சி எங்கே இருக்கிறது? நான் இராஜிநாமா கொடுத்துவிடுகிறேன்" என்று சொல்லியும் மாநாட்டை நடத்தாமல் இருக்க பல தந்திரங்கள் செய்தார்கள்.

கடைசியாக 10-8-44ந் தேதி பெரியார் சேலம் சென்று வரவேற்புக் கழக அங்கத்தினர் கூட்டம் ஒன்று கூட்டி அதில் மக்கள் நிலை தெரிந்து வேறு சில காரியதரிசிகளை நியமித்து பணமும் சுமார் ரூ. 2000 அளவுக்கு ஏற்பாடு செய்துவிட்டதை அறிந்த வரவேற்புத் தலைவரும் காரியதரிசிகளும் பெரியார் ஜாகைக்கு வந்து தாங்கள் அக்கூட்டத்திற்கு வராததற்கு ஒவ்வொருவரும் ஒரு சாக்கு சொல்லி மாநாட்டை 20ந் தேதி நடத்தி விடுகிறோம் என்று உறுதிசொல்லிவிட்டுச் சென்றார்கள். மறுநாள் பத்திரிகைகளில் மாநாடு 20ந் தேதி நடக்கிறது என்றும், தலைவர், திறப்பாளர், கொடியேற்றுபவர் இன்னார் இன்னார் என்றும் பத்திரிகைகளில் சேதிகள் காணப்பட்டன.

பிறகு அத்தலைவர் தவிர கொடியேற்றுபவர், திறப்பவர் ஆகியவர்கள் பெயரை மாற்றி வேறுபெயர்கள் வெளியாயின. இந்த நிலையில் அநேக காரியங்கள் திரைமறைவில் செய்யப்பட்டு வேறு பல எண்ணங்களோடு பல இடம் சுற்றித் திரிந்தும் மாநாட்டை திடீரென்று 27ந் தேதி மாற்றி எவ்வளவோ செய்து பார்த்தும் என்னென்னமோ செய்யப்பட்டும் கடைசியாக மாநாடு 27ந்தேதி நடந்தேவிட்டது. 4000 பிரதிநிதிகள் வெளியூர்களில் இருந்து மாத்திரம் ஏராளமாய் வந்து குவிந்து விட்டார்கள். மாநாட்டை தங்கள் இஷ்டப்படி நடத்த தோழர் பாண்டியன் அவர்களை மலைபோல் நம்பி மாநாட்டுக் கொட்டகைக்குள் யாரையும் விடாமல் தங்களுக்கு வேண்டியவர்களை மாத்திரம் விட்டுக்கொண்டு காரியம் நடத்த [illegible] கூர்க்கர்களை மாநாட்டுப் பந்தலின் வாயில்களில் நிறுத்தி அவர்களை இமயமலை போல் நம்பி கேட்டுக்கு காவல் வைத்துவிட்டு பிரதிநிதி டிக்கட் கொடுப்பதில் ஒவ்வொரு பிரதிநிதியும் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும் என்றும் அவ்விண்ணப்பத்தின் மீது டிக்கட் கொடுக்க யோசிக்கப்படும் என்றும், மற்றும் என்னென்னவெல்லாம் செய்யப்பட்டது என்றாலும் தோழர் பாண்டியன் அவர்கள் இக்காரியங்களை வெறுத்து மாநாட்டுக்காரியதரிசி முதலியவர்களுக்கு கைவிரித்து விட்டதனாலும், கூர்க்காக்கள் விரட்டப்பட்டு விட்டதினாலும், டெலிகேட் டிக்கட்டுகள் வழக்கம்போல் கொடுக்க வேண்டியதாகிவிட்டன. மக்கள் பல இடங்களில் இருந்து பதினாயிரக்கணக்கில் பெருகிய வண்ணம் இருந்ததால் மரியாதையாகவும், கண்ணியமாகவும், ஒழுங்குமுறைப்படியும் மாநாடு நடக்கவேண்டியதாகி விட்டது.

தலைவர் ஊர்வலத்தில் ஊர் முழுதுமே கலந்து கொண்டது. பெரியார் துதியும் பெரியார் பிரார்த்தனையுமே கொடியேற்று விழா, திறப்பு விழா வரவேற்பு சொற்பொழிவு, காரியதரிசி தலைகாட்டுதல் ஆகிய எவையிலும் தலைசிறந்து விளங்கின. அப்படி விளங்கவேண்டியதாகவும் ஏற்பட்டு விட்டது.

மேற்கண்ட விழாவாற்றுவோர் பேச நினைத்தது வேறு. குறித்து வந்தது வேறு. பேச நேர்ந்தது வேறு என்றாகி விட்டது.

இந்த நிலையில் பெரியாரை தலைமைப் பதவிக்கு ஆதரித்துப் பேசியவர்களில் தோழர் டி. சண்முகம் அவர்கள் இவர்கள் குட்டை உடைத்துவிட்டார். அதாவது "இந்த பேச்சு மேடைவரையில்தானா வீட்டுக்கு போயும் இருக்குமா" என்றார். பிறகு தலைவர் எழுந்து மக்கள் ஆரவாரத்தைப்பார்த்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து யாவர் கண்களிலும் நீர் ஊற்றை தருவித்துவிட்டு, தோழர்களே என்றதும் யாவரும் ஸ்மரணை அற்றுப்போய் விட்டார்கள். பெரியாரும் தன்னை தேற்றிக்கொண்டு "என் அருமை இளைஞர்களே" என்றதும் யாவரும் உணர்ச்சிபெற்று பெரியார் வாழ்க, பெரியார் எங்கள் தலைவர், சூழ்ச்சியாளரும் சுயநலவாதிகளும் சமயசஞ்சீவிகளும் ஒழிக என்று ஒலித்தார்கள். பெரியார் கையை உயர்த்தினார், ஒலி மறைந்தது.

எனது அன்பான பாண்டியன் அவர்களே என்று ஆரம்பித்ததும் தோழர் பாண்டியன் அவர் கண்களிலும் நீர் ஊற்றுக் கண்டு விட்டது.

பிறகு பெரியார் பேசியதாவது:

"நான் இந்த மாநாட்டிற்கு வருவதாக நேற்றுமாலை 4-மணிக்கு தான் உறுதிசெய்தேன். தலைமை உரை ஒன்றும் தயார்செய்யவில்லை; தலைமை உரையில் சொல்லவேண்டியவைகளும் அதிகம் இல்லை. அதிலும் முக்கியமானது என்னவெனில் நான் தென் இந்திய நலஉரிமைச் சங்க மாநாட்டு தலைவனாக தலைமை

உரை நிகழ்த்துவது என்பது இது தான் கடைசித்தடவை. என்னைப் பலர் இக்கட்சியின் சர்வாதிகாரியாய் நடக்கிறேன் என்று கூறினார்கள். சிலர் சர்வாதிகாரியாய் இருக்க வேண்டும் என்றும் கூறினார்கள். சர்வாதிகாரத்தனம் குற்றமானது என்று நான் கருதுவதில்லை. பொறுப்பு உடையவர் அதிகாரம் உடையவர்தான் தீரும். அந்தப் பொறுப்பு ஏற்பட்டால் அதிக அதிகாரமும் எல்லாப் பொறுப்பும் நானே எடுத்துக் கொள்ள நேர்ந்தால் சர்வாதிகாரியாகத்தானே ஆகிவிடவேண்டியதாகும்.

நான் எந்த இயக்கத்தில் எந்த ஸ்தாபனத்தில் பங்கு எடுத்துக் கொண்டாலும் நானே பொறுப்பாளி என்றும் என் தலைமேலேயே எல்லாப்பாரமும் இருக்கிறது என்றுக் கருதுவது என் இயற்கை. நான் வாலிப காலம் முதல் எந்தெந்த பொது வாழ்வில் ஈடுபட்டேனோ அனேகமாக அவைகள் எல்லாவற்றிலும் தமிழ்நாடு காங்கரஸ் தலைவனாக இருக்கும் போதும்கூட அப்படித்தான் நடந்துவந்திருக்கிறேன். ஆனால் அதனால் நான் யாரையும் அலட்சியம் செய்யவில்லை அவமதிக்கவில்லை. ஆகவே அதனால் ஸ்தாபனங்களுக்கு குற்றம் ஏற்பட்டுவிடவில்லை.

நான் சீக்கிரம் ஓய்வு எடுத்துக் கொள்வேன். அதற்குள் "திராவிடர்கள் தியாகத்துக்கு பயந்தவர்கள், தனித்த சுயநலக்காரர்கள் சிறை செல்லப் பயப்படுபவர்கள்" என்று யாராலும் சொல்லுவதற்கு சிறிதுகூட இடமில்லாமல் இந்தி எதிர்ப்பைக்காட்டிலும் இன்னும் அதிகமாக 4000, 5000 பேர்களை சிறைக்கனுப்பி, நம் இயக்கத்திற்கு பல ஆயிரக் கணக்கான தொண்டர்களை முழுநேரத் தொண்டர்களாக இருக்கும்படி செய்துவிட்டுப் போகவேண்டுமென்பது என்னுடைய ஆசை"// என்பதாகச் சொல்லி அமர்ந்து எழுந்து முக்கியமான தீர்மானங்கள் இம்மாநாட்டில் நடைபெறவேண்டி இருப்பதால் சீக்கிரம் உணவருந்திவிட்டு 3-மணிக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு மாநாட்டுக்கு உண்டி ஓய்வு கொடுத்துவிட்டார்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

மாநாடு 3-மணிக்கு கூடிற்று. தலைவர் 3-15க்கு வந்தார். வந்ததும் விஷயாலோசனை கமிட்டிக்கு பிரதிநிதிகள் தெரிந்தெடுப்பதா, பிரதிநிதியாவரும் விஷயாலோசனை கமிட்டியாக இருப்பதா என்ற பிரச்சினையின்பேரில் பிரதிநிதிகள் யாவரும் விஷயாலோசனை கமிட்டியாகக் கொள்ளலாம், என்ற முடிவு ஏற்பட்டது. உடனே தலைவர் எழுந்து பத்திரிகை ஆனர்களும் பிரதிநிதிகள் அல்லாதவர்களும் விலகி இருக்க வேண்டும் என்றும், நடைபெறும் விஷயங்களைப் பத்திரிகைகாரர்கள் பதிவு செய்யக்கூடாதென்றும் கண்டிப்பாக கேட்டுக் கொண்டு தீர்மானங்களைப் பற்றி பேசுமுன், காரியதரிசி தோழர் அண்ணாதுரை வரவேற்புக் காரியதரிசி தோழர் செட்டோவை மாநாட்டுக்கு வந்த தீர்மானங்களைக் கொடுக்கும்படி ஒன்றுக்குமேற்பட்ட தடவை கேட்டார். தோழர் செட்டோ, தோழர் பாண்டியனைக் கேட்டுவிட்டு தருவதாகச் சொல்லி கடைசியாக சில தீர்மானங்கள் மாத்திரம் மேஜைக்கு வந்தன.

மற்றும் முக்கிய தீர்மானங்கள் மாத்திரம்தான் பாசாக்கநேரமிருக்கிறது. மீதி நேரமிருந்தால் பார்க்கலாம் என்று கூறி கூட்டத்தில் அமர்ந்திருந்தார். இந்நிலையில் பல தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டன. முறைப்படி பிரரேபித்து ஆமோதித்து ஆதரித்து கைதூக்கிக் காட்டும்படி கேட்டு ஓட்டுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

அவை முடிந்ததும் அக்கூட்டத்தை மாநாடு ஆக ஆக்கப்பட்டு முறைப்படி தீர்மானங்கள் பிரரேபிக்கப்பட்டு ஆமோதிக்கப்பட்டு ஆதரிக்கப்பட்டு எதிர்ப்புப் பேச்சாளர்களுக்கு இடம் கொடுத்து விளக்கி ஓட்டுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

தீர்மானம் முடிந்ததும் தலைவர் முடிவுரையில் 6 மாத காலம் என்பதை மறுபடியும் 6 மாதத்திற்குள் என்பதாக விளக்கி அதற்குள் ஒவ்வொருவர் நடந்து கொள்ள வேண்டியதைப் பற்றிப் பேசினார். பிறகு ராவ்சாகிப் துரைசாமி பிள்ளை அவர்கள் வந்தனோபசாரம் கூற மாநாடு இனிது முடிந்தது.

இப்படி இருக்க மாநாட்டிற்குப் பின் பத்திரிக்கைகளில் பல அறிக்கைகள் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் நம் எதிரிகளான ஆரியர்களும் மற்றும் யோக்கியப் பொறுப்பற்ற பத்திரிகைகளும் நம் கட்சியை இழித்துக்கூறி நம் நிலையை உலகமக்கள் கேவலமாய்க் கருத வேண்டும் என்பவர்கள் தங்கள் பத்திரிக்கைகளில் இடம் கொடுத்து இவ்விழி செயல்களை வரவேற்பதும் அதற்கு ஆக்கமளிப்பதுமே யாகும்.

இவ்வறிக்கைகளுக்கு சமாதானமாக பெரியார் முதலாவதாக ஒரு அறிக்கை வெளிப்படுத்தி இருக்கிறார். அது வேறு பக்கம் இருக்கிறது.

தீர்மானங்கள் அமுலுக்கு வந்தால் யார்யார் நிலைகுலைந்துவிடுமோ, யார் யார் வயிற்றுப் பிழைப்புக்கு வழி அடைத்துவிடுமோ அவர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள சகல காரியமும் செய்துவிட்டுத்தான் அடங்குவார்கள். ஆதலால் அவர்கள் அறிக்கையை எவரும் லட்சியம் செய்ய வேண்டியதில்லை.

தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், செட்டோ ஆகியவர்களின் தன்மையைப்பற்றி நாம் சொல்லி யாரும் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை.

சர்க்காரிடம் பட்டம் பெறச் செய்யவும் பப்ளிக் பிராசிகூட்டர் வேலை வாங்கிக் கொடுக்கவும் தோழர் பி. பாலசுப்பிரமணியத்திற்கு சக்தி இருக்கிறதென்று அவற்றில் ஆசையுள்ளவர்கள் கருதுகிறார்கள். அதற்கேற்ற வண்ணம் தோழர் பி. பாலசுப்பிரமணியம் காட்டிக்கொள்கிறார். கவர்னரும் அட்வைசரும் பாலசுப்பிரமணியத்தினிடம் அதிக நேசம் என்றும் அதிகாரிகள் பாலசுப்பிரமணியத்தைக் கண்டால் நடுங்குகிறார்கள் என்றும் ஒரு செட்டு பிரசாரம் செய்து பாலசுப்பிரமணியத்துக்கு பணமும் பத்திரங்களும் வாங்கிக் கொடுத்து பங்கு பெறுகிறார்கள் என்பது யாருக்குத்தெரியாது? பட்டத்திலும் உத்தியோகத்திலும் மக்களுக்கு உள்ள ஆசை யார் காலிலும் விழும்படி செய்வதில் அதிசயமில்லை. ஆதலால் இதன் பயனாய் ஏற்படுகிற கூட்டு அமைப்பையும் அந்த அமைப்பை

# சேலம் மாநாடு பற்றி பெரியார் அறிக்கை

சேலம் மாநாட்டைப் பற்றி ஒரு சிலர் தாறுமாறான அறிக்கைகளை பத்திரிகைகளுக்கு அனுப்பி வருகிறார்கள்.

அவைகள் ஒன்றும் நேர்மையானவை அல்ல. பெரும்பாலான விஷயங்கள் உண்மையுமல்ல. அந்த அறிக்கைகள் எனக்கு ஒன்றும் அனுப்பப்படவுமில்லை.

மாநாட்டில் ஜஸ்டிஸ் கட்சிக்கு தென் இந்திய நல உரிமைக் கழகம் என்று இருந்த பெயரை திராவிடர் கழகம் என்று மாற்றப்பட்டது உண்மைதான், ஆனால் அத்தீர்மானம் பொதுக்கூட்டத்தில் பிரரேபித்து ஆமோதித்தவுடன் இதற்குப் "போதிய நோட்டீசு இல்லை" என்று மாத்திரம் தோழர் கெட்டோ சொன்னார். அதை தோழர் கணேசசங்கரன் ஆதரித்தார். தலைவர் அதற்கு சமாதானம் சொன்னார். அதாவது,

"சேலத்தில் 26-11-43ம் தேதியில் நடந்த S.I.L.F. நிர்வாகசபைக் கூட்டத்தில் பெயர்மாற்றம் நிறைவேற்றப்பட்டு அதை சேலத்தில் நடக்கும் மாநாடு (இந்த) மாநாட்டுக்கு சிபார்சு செய்வதாகவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதில் தோழர்கள் கெட்டோ, இரத்தினம் பிள்ளை முதலியவர்களும் இருந்திருக்கிறார்கள். அதன் பின் சுமார் 20-க்கு மேற்பட்ட ஜில்லா, தாலூகா மாநாடுகளில் இது நிறைவேற்றப்பட்டு சேலம் மாநாட்டுக்கு சிபார்சு செய்யப்பட்டு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாநாட்டிற்கும் இதுபற்றி வெளியூர்களில் இருந்து ஏராளமான தீர்மானங்கள் வந்திருக்கின்றன. அவை தோழர் கெட்டோ அவர்கள் வசமே இன்னமும் இருக்கின்றன.

அன்றியும் தென் இந்தியர் கழகம் என்பதும் திராவிடர் கழகம் என்பதும் ஆதியில் ஏற்படுத்தினவர்கள் கருத்தில் வித்தியாச அருத்தம் கொண்டதல்ல. மக்களுக்கு இன எழுச்சியும், நாட்டு எழுச்சியும் ஏற்படுவதற்கும் திராவிட நாடு கேட்பதற்கு ஆக்கம் அளிப்பதற்கும் ஆகவே இச்சிறு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது" என்று சொன்னார்.

பிரதிநிதிகள் 'ஓட்டு, ஓட்டு' என்றார்கள். ஓட்டுக்கு விடப்பட்டது; ஏகமனதாய் நிறைவேறிற்று. அப்போது தோழர் கெட்டோ அவர்களும் மற்றும் இப்போது அறிக்கைவிடும் நண்பர்களும் இருந்தார்கள். எதிர்ப்புக்கு கெட்டோவாவது இதர நண்பர்களாவது கை தூக்கியோ ஆக்ஷேபணையைக் காட்டியோ ஓட்டுகொடுக்கவில்லை; வேறு ஒருவரும் அதிர்ப்புக்கு ஓட்டுக்கொடுக்கவில்லை. இதுதான் பெயர் மாற்றத்தீர்மானத்தினுடையவும் அதன் எதிர்ப்பினுடையவும் நடவடிக்கையாகும். கெட்டோ முதலியவர்களால் பத்திரிகைகளுக்கு வந்த சேதிகள் பின்னால் யோசித்துச் சொல்லப்படுபவைகளாகும்.

மாநாடு வெற்றியாக முடிந்து தலைவர் முடிவுரை ஆனவுடன் ராவ்சாஹிப் துரைசாமி பிள்ளை அவர்கள் வரவேற்புக்கழக சார்பில் தீர்மானங்களைப் புகழ்ந்து கூறி தலைவருக்கும், தோழர் பாண்டியனுக்கும், வரவேற்புத் தலைவர், காரியதரிசி, ஆகியவர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும், மாநாட்டுக்கு கொட்டகை உதவிய முனிசிபாலிட்டியாருக்கும் மற்றவர்களுக்கும் பெருத்த கைதட்டலிடையே நன்றி கூறினார்கள்.

மாநாடு எவ்வித ஒருசிறு அபிப்பிராயபேதமோ மேற்கண்டதைத் தவிர ஒரு சிறு எதிர்ப்போ இல்லாமல் நடைபெற்றது. தீர்மானங்கள் யாவும் ஏகமனதாய் நிறைவேறின. இதற்கு பத்திரிகை நிருபர்களும், சர்க்கார் C. I. D. சுருக்கெழுத்தாளர்கள் ரிகார்டுகளும் அதிகாரிகளும் காட்சியாளர்களும் பிரதிநிதிகளும் சாக்ஷியாகும்.

ஈ. வெ. ராமசாமி.

---

தோழர் பாலசுப்பிரமணியம் பயன்படுத்திக் கொள்ளுவதையும் கவனிக்க ஆரம்பித்தால் எந்தக் கட்சிக்கும் மதிப்போ மானமோ இருக்க முடியாது. நம்மில் சில பெரிய மனிதர்கள் என்பவர்களும் "சண்டே அப்சர்வர்" பத்திரிகையை "சினிமா தூது" பத்திரிகை போல் கண்டு நடுங்கி கப்பம் கட்டி வருகிறார்கள். இவர்களுடைய தொல்லைகளும் நமக்கு இருந்துதான் தீரும்.

நம் பெரியார் எதற்கும் அஞ்சமாட்டார் என்பதோடு தனது மூச்சும் காதும் இருக்கும் வரை திராவிடர் கட்சியை நிலைநிறுத்தி தொண்டாற்றச் செய்து திராவிடர்களுக்கு மனிதத்தன்மையும், மானமும், வீரமும், வெற்றியும் தேடிக் கொடுக்கத் தொண்டாற்றுவார் என்பதிலும் அதற்கு யாராலும் எந்தவிதமான தடையும் ஏற்பட்டு விடாது என்பதும் உறுதி. ஆகவே சுயநலத் துருத்திகளின் வசைக்கும் விஷமத்துக்கும், காதும் கருத்தும் கொடுக்காமல் தீர்மானங்களுக்கு மதிப்பும், ஆக்கமும், வெற்றியும் தரப் பாடுபடவேண்டியது உண்மைத் திராவிடர், பரிசுத்தத் திராவிடர் கடமை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

ரோஜா முத்தையா

---

(4ம் பக்கத் தொடர்ச்சி)

யின்றி சர்க்காருக்கு உதவி வந்ததும் சர்க்காராலும் பாமர மக்களாலும் நம் கட்சியை இழிவாகக் கருதப்படத்தக்க நிலை ஏற்படுவதற்கு பயன்பட்டு விட்டது.

இந்திய அரசியல் சமூக இயல் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் சர்க்காரார் நம் கட்சியையும், நம் இலட்சியமாகிய திராவிடநாட்டுப் பிரிவினையையும் அலட்சியம் செய்து வருகிறார்கள்.

இந்திய மக்களின் அரசியல் சமுதாய இயல் சம்பந்தமான ஸ்தாபனங்களில் நம் ஸ்தாபனம் குறிப்பிடத்தக்கதாகவும், நீதி நெறி உடையதாகவும் இருந்து, ஒழுங்கு முறைக்குக் கட்டுப்பட்டு சர்க்கார் மெச்சும்படி நடந்துவந்தும், நம் ஸ்தாபனம் சர்க்காரரால் மற்ற சாதாரண ஸ்தாபனங்களோடு ஒன்றாகக்கூட சேர்த்துப் பேசுவதற்கில்லாததாக அலட்சியப் படுத்தப்பட்டது.

மகாகனம் கவர்னரலோ, கவர்னர் ஜனரலாலோ, இந்தியா மந்திரியாலோ, பிரிட்டிஷ் முதல் மந்திரியினாலோ, இந்திய அரசியல் கட்சிகளைப்பற்றி பல தடவை பேச ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் ஒன்று இரண்டுதடவைகூட நம் சமுதாயத்தையோ நம் ஸ்தாபனத்தையோ, நம் இலட்சியத்தையோ குறிப்பிட கட்டுப்பட்டாய் மறந்தே வாய்ப்பட்டிருக்கிறது.

ஆகவே இப்படிப்பட்ட நிலைமை

மாறி நம் கட்சியிலே மதிக்கப்படவும் குறிப்பிடவும் மக்களின் மன நிலையில் மாற்றம் ஏற்படவும், நம் கட்சி இனியும் கட்டுப்பாடும் உறுதிப்பெற்று உண்மையான தொண்டர்களைக் கொண்டு காரியமாற்றும் தீவிரமாயும் தொண்டாற்றி மதிப்புப் பெறவும் நல்ல வசதியும் சவுகரியமும் ஏற்படுவதற்கு நம் கட்சிக்கு அடியில் கண்ட திட்டம் உடனே அமுலுக்குக் கொண்டு வரப்படவேண்டியது அவசியமும் அவசரமும் ஆன காரியமென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

அ. நம் கட்சியில் இருக்கும் அங்கத்தினர்களும் இனியும் வந்துசேர இருக்கும் அங்கத்தினர்களும் சர்க்காரால் தங்களுக்கு அளிக்கப்பட்ட எந்தவிதமான கவுரவப் பட்டங்களையும் உடனே சர்க்காருக்கு வாபசு செய்துவிட வேண்டும், இனி ஏற்றுக் கொள்ளவும் கூடாது.

ஆ. அதுபோலவே அவர்கள் யுத்தத்திற்கு ஆகவும் மற்றும் சர்க்கார் காரியங்களுக்கு ஆகவும், மத்திய சர்க்காராலோ, மாகாண சர்க்காராலோ எந்தவிதமான கமிட்டியில் எப்படிப்பட்ட கவுரவ ஸ்தானம், அங்கத்தினர் பதவி, ஆலோசகர் பதவி அளிக்கப்பட்டிருந்தாலும் அவைகளையெல்லாம் உடனே ராஜிநாமாச் செய்துவிடவேண்டியது.

இ. தேர்தல் அல்லாமல் ஸ்தலஸ்தாபனம் அதாவது ஜில்லா போர்டு, முனிசிபல் சபை, பஞ்சாயத்து போர்டு ஆகியவைகளின் தலைவர் உபதலைவர் அங்கத்தினர் ஆகிய பதவிகளில் சர்க்காரால் நியமனம் பெற்ற அல்லது நியமனம் பெற்று அங்கத்தினர்களால் தேர்தல் பெற்றோ இருக்கிறவர்கள் யாவரும் தங்கள் தங்கள் பதவிகளை உடனே ராஜிநாமாச் செய்துவிட வேண்டியது.

ஈ. சர்க்காரால் தொகுதி வகுக்கப்பட்ட எந்தவிதமான தேர்தலுக்கும் கட்சி அங்கத்தினர்கள் நிற்கக் கூடாது.

இதை ஏற்று ஒரு வாரத்தில் இதன்படி கட்டுப்பட்டு நடக்காதவர்கள் எவரும் தங்களுக்கு இக்கட்சியில் இருக்க இஷ்டமில்லை என்று கருதி கட்சியை விட்டு நீங்கிக்கொண்டவர்களாகக் கருதப்பட வேண்டியவர்களாவார்கள்."

இதை சங்க காரியதரிசி தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் பிரேரேபித்தார்.

கட்சியின் காரியக்கமிட்டி காரியதரிசி தோழர் டபிள்யூ. பு. அ. சௌந்திரபாண்டியன் அவர்கள் மனப்பூர்வமாய் ஆமோதிப்பதாக கூறி ஒரு திருத்தம் கூறினார். திருத்தம் தலைவர் பெரியாராலும் அண்ணாதுரையாலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. திருத்தமாவது:

(ஈ) [illegible] பதிலாக 1945 மார்ச்சு 31ஆம் தேதிக்குள்ளாக தமிழ்நாட்டில் 10000 அங்கத்தினர்களுக்குக் குறையாமல் அங்கத்தினர்களை சேர்த்து ஜில்லா தாலூகா சங்கங்களை இன்னும் அதிகமாக பலப்படுத்தி ஒழுங்குமுறை கண்டிப்புடன் ஏற்படுத்தி ஒரு தனி மாநாடு கூட்டி தெரிவித்து அன்று முதல் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதாகும்.

திருத்தப்பட்டபடி தீர்மானத்தை ஓட்டுக்கு விட தலைவர் எழுந்தார். மாநாட்டின் பெரும்பான்மையான பிரதிநிதிகளால், 'வாய்தா கூடாது இன்று முதலே அமுலுக்குவரவேண்டும்' என்றும் 'ஒரு வார வாய்தா போதும்' என்றும், அதிகமான காலம் 3-மாதத்திற்குள் என்று இருந்தால் போதும் என்று சொல்லிக்கொண்டு நூற்றுக்கணக்கான பேர்கள் மேடைக்குவந்து பேச தலைவரை அனுமதி கேட்கும் ஆரவாரம் செய்வதுமூலம் திருத்தத்தை எதிர்த்தார்கள். பிறகு தலைவர் 2, 3-பேர்களை மாத்திரம் பேச அனுமதித்தபின் திருத்தத்தை எதிர்த்தவர்களுக்கு சமாதானம் சொல்லும் முறையில் பேசியதாவது:

தோழர்களே,

இத்தீர்மானத்திற்கு பலமான எதிர்ப்பு இருக்கும் என்று கருதினேன். இந்த 15000-பேர் கொண்ட கூட்டத்தில் ஒரு சிறு எதிர்ப்புகூட இல்லை என்று கண்டேன். இந்நிலை உங்களுக்கு என்னை, ஒரு சலிப்படைய முடியாத தொண்டனாக ஆக்கிவிட்டது. இந்த தீர்மானத்தை நான் இன்றும் இனிமேலும் ஒரு நிமிடமாவது தலைமை வகிப்பதற்கும் தலைமைவகிக்காமல் தப்பித்துக்கொள்ளவும் காரணமாக வைத்திருந்தேன். அப்படி இருக்க இத்தீர்மானம் இன்று நம்மில் யாருக்கும் அதாவது திருத்தம் பிரேரபித்த என் நண்பர் மதுரை ஜில்லா போர்டு பிரசிடெண்ட், பாண்டியனுக்கும், இங்கு வீற்றிருக்கும் நண்பர் செங்கற்பட்டு ஜில்லா போர்டு பிரசிடெண்ட் தோழர் டி. ஷண்முகத்திற்கும் மற்றும் சில பதவி ஆளருக்கும்கூட அபிப்பிராய பேதம் இல்லை என்பதை நீங்கள் காண்கிறீர்கள்.

ஆனால் கொஞ்சம் வாய்தா காலம் கேட்கப்படுகிறது. இது பாண்டியன் அவர்களின் ஜில்லா போர்டு பிரசிடெண்டு ஸ்தானத்தைக் காப்பாற்றவல்ல. இப்பொழுதே விட்டுவிட அவர் தயாராய் இருக்கிறார். ஆனால் அவர் இத்திருத்த தீர்மானம் இங்கு கொண்டுவந்ததின் கருத்து பட்டம்பதவி ஆளர்களை வெளியில் அனுப்புவதற்கு ஆக அல்ல, அவர்களுடைய ஒத்துழைப்பை இன்னும் அதிகமாகப் பெறவும், பாமர மக்கள் ஆதரவை அதிகமாகப் பெறவும், சர்க்காரைத் திருத்தவும், நம் இயக்கத்தில் தன்னல மறுப்பு உணர்ச்சியும் [illegible] கொண்டு[வந்]திருக்கிறோம். ஆதலால் சிறிது நாள் பொறுப்பதால் ஒன்றும் முழுகிப்போகாது. நாம் இத்தீர்மானத்தினால் 6 மாதகாலம் என்று அறுதியிட்டு வாய்தா கொடுக்கவில்லை. 6 மாதத்திற்கு உள்ளாக என்றுதான் போட்டிருக்கிறோம். 6 மாதத்திற்குள் என்பது ஒரு மாதத்திற்குள்ளாகவே என்றும் பொருள் கொள்ளலாம். நாளைக்கே ஆரம்பித்தாலும் இத்தீர்மானத்தின்படி குற்றமாகாது.

ஆனால் இத்தீர்மானத்தை நிறைவேற்றுகிற நீங்களும் நானும் வெறும் வாய்ப்பேச்சாளர்களாயிருந்து சர்க்காரையும் பட்டதாரிகளையும் குறைகூறுகிறோம் என்று யாரும் கருதக்கூடாது. நமக்கு அதிகமாக வேலை இதில் ஒன்றும் இல்லை. தமிழ்நாட்டில் ஜில்லா தாலூகா சங்கங்களை இத்தீர்மானங்களின்படி அமைக்க வேண்டும். ஜில்லாவுக்கு ஆயிரம் பேராவது அங்கத்தினர்கள் இதன்படி சேர்க்கப்பட வேண்டும். தனி மாநாடு கூட்டி அதில் வெளிப்படுத்த வேண்டும் என்பது தவிர வேறு கஷ்டம் ஒன்றுமில்லை. தோழர் பாண்டியன் அவர்களோடு ஆலோசித்தேன். அவர் குறைகூறுபவர்களுக்கு வாய்ப்புக்காகவே இதைப் பிரேரேபிக்கிறேன் என்று சொன்னார். அது சரியென்று படுகிறது. என் தலைமையில் உங்களுக்கு இருக்கும் அன்பை இந்த சொற்ப நாள் வாய்தாவுக்கு அனுமதி கொடுப்பதின் மூலம் காட்டுங்கள். இந்தச் சமயத்தில் தனிப்பட்ட முறையில் ஒன்றும் பேசக்கூடாது. எல்லோரையும் நண்பராகக் கருதுங்கள். நம்மை வைகிறவர்களையும் அவர்கள் விஷயத்தில் பரிதாபப்பட்டுக் கொண்டு நண்பராகக் கருதுங்கள். உழைப்பாளிகள் யார்? உழைப்பின் பலனை அனுபவிக்கிறவர்கள் யார்? என்பது இத்தீர்மானத்தின் செய்கையினால் விளங்கிவிடப் போகிறது என்று கூறி ஓட்டுக்கு விட்டார்.

பெருத்த ஆரவாரத்தின் மீது ஆயிரக்கணக்கான கைகள் ஒரே நேரம் ஏகமனதாக நின்று ஆதரவு அளித்தன.

ஆட்சேபிக்கிறவர்கள் கைதூக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. 6 மாத வாய்தா கூடாதென்று பேசிய இரண்டொருவர் கைதூக்கினர். அவர்களைப் பார்த்து தலைவர் இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக பதிவு செய்ய நீங்கள் தயவு செய்து அனுமதியளிக்கக் கூடாதா என்று கேட்டார். உடனே அவர்களும் கையை தொங்கப்போட்டுக் கொண்டார்கள். பிறகு தலைவர் ஆட்சேபிக்கிறவர்கள் கைதூக்கலாம் என்று சொல்லி இரண்டு தடவை நான்கு புறமும் திரும்பிப்பார்த்தார்.

திருத்தப்பட்டபடி தீர்மானம் [illegible]

தாக நிறைவேறியது. இதை தலைவர் சொன்னவுடன் சொல்ல முடியாத ஏராளமான கைத்தட்டலும், ஆரவாரமும், பெரியார் வாழ்க! கழகம் வாழ்க! திராவிட நாடு திராவிடருக்கே! என்கின்ற பேரொலியும் மச்சை திக்கச்செய்துவிட்டது.

ஒழுங்கு நடவடிக்கை

மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகு கட்சிக்கு சில விஷயங்களில் ஒழுங்குமுறை நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று சிலர் மீது அதாவது கஸ்தூரிபாய் பண்டுக்கு பணம் கொடுத்தவர்களைப்பற்றியும் கட்சி நடவடிக்கைகளையும் தலைவர் மீதும் பொய்யான குற்றம் சுமத்தி இழிவாக எழுதிவந்தவர்களைப்பற்றியும் அதைத் தெரிந்தும் அப்படிப்பட்டவர்களை ஆதரித்து அவர்களுக்கு உதவியும் ஆதரவும் அளித்தவர்கள் மீதிலும் சேலம் வரவேற்புக் கமிட்டி காரியதரிசிகளின் ஒழுங்கு தவறாக நடந்துகொண்ட நடத்தைகளைக் கண்டித்தும் தலைவரிடம் பல தீர்மானங்கள் கொடுக்கப்பட்டன. அவைகளைப்பெற்ற தலைவர் எழுந்து, பேசியதாவது:

தோழர்களே! இன்று என்னிடத்தில் கட்சியின் அங்கத்தினர் பலர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பல தீர்மானங்கள் வந்திருக்கின்றன. இவைகளின் நகல்கள் சிலநாள்களுக்கு முன்பே வரவேற்புக் கமிட்டிக்கும் எனக்கும் அனுப்பியிருப்பதாக இதில் காணப்படுகிறது. அப்படி அனுப்பப்பட்ட தீர்மானங்கள் என்னிடம் பல இருக்கின்றன; அவைகளுக்கெல்லாம் சேர்த்து ஓரே பதில் சொல்லுகிறேன்.

யாரையும் நான் ஆதரிப்பதாகவோ இதுபோன்ற தப்பிதங்களை இனியும் தொடர்ந்து அனுமதிக்கப் போவதாகவோ கருதிவிடாதீர்கள். இந்த மாநாட்டு வரவேற்புத் தலைவர், கட்சியின் பேரால் குறை கூறினவர்களையும் அபிப்பிராயபேதப் பட்டவர்களையும் எல்லோரையும் ஒன்று சேர்ப்பதற்காகவே பலரை இங்கு அழைத்திருக்கிறேனே ஒழிய அவர்கள் நடத்தையை ஆதரிப்பதாக அல்லவென்று ஆதியில் தெரிவித்துக்கொண்டு எந்தவிதமான மனக்கசப்புக்கும் இடமில்லாமல் மாநாட்டை நடத்திக்கொடுக்க வேண்டுமென்று உங்களையும் என்னையும் வேண்டிக்கொண்டிருக்கிறார். அதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். இரண்டாவது நம்மிடத்தில் இதுவரையில் ஒழுங்குநடவடிக்கை எடுத்துக்கொள்கிற ஒரு முறை அதிகமாக கையாளப்பட்டு வரவில்லை. அப்படித்தான் செய்து ஆகவேண்டும் என்ற தீர்மானமும் இல்லை; இனி அப்படி நேராவண்ணம் பார்த்துக்கொள்ள ஒரு தீர்மானம் தோழர் அண்ணாதுரையவர்கள் பிரேரேபிக்கப்பட்டு முன்னமேயே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. குடி அரசு பத்திரிகையிலும் அத்தீர்மான வாசகம் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அதற்காக ஒரு கமிட்டியைப் போட்டு அவர்கள் வசம் விட்டுவிடப் போகிறேன். அதையும் நீங்கள் ஆதரியுங்கள். ஆகவே இனிமேல் கடுமையான வகை ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமென்று நான் சொல்வதை தயவு செய்து ஏற்றுக்கொள்ளுங்கள். கஸ்தூரிபாய் பண்டு விஷயத்தில் நமக்குப் பத்திரிகைகளில் கண்ட செய்தி தவிர நேரில் ஒன்றும் தெரியாது. நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமுன் கட்சிக்கு அது உண்மையா தப்பா என்பதில் ஒரு உறுதியான தெளிவுமிருக்கவேண்டும்; அன்றியும், அப்பண்டு விஷயமாக அநேகர்களுடைய பேரை பத்திரிகைகளில் பார்க்கிறோம். நாமும் கஸ்தூரிபாய் பண்டு விஷயத்தில் ஒரு கட்டளை பிறப்பிக்கவில்லை. இன்று நாம் பல முக்கிய தீர்மானங்களை எல்லாம் போட்டிருக்கிறோம். அதற்கு நமக்கு அதிகமான ஆதரவு வேண்டும். அதனால் இந்த உறுதியற்றதும் தெளிவற்றதும் ஆன காரியங்களை மற்ற தீர்மானங்களின் நன்மையைவிட பெரிதாகக் கருதவேண்டியதில்லை. என்னைக் குறை கூறிய விஷயம், இனிமேல் அப்படி ஏற்படாதென்று குறை கூறினவர்களிடத்திலிருந்தே மன்னிப்புக் கேட்டுக்கொள்வதுபோல் தெளிவாக்கப்பட்டுவிட்டது. அப்படிப்பட்டவர்களை நீங்கள் ஆதரிக்கக்கூடாதென்று பாண்டியன் முதலிய நண்பர்களைக் கேட்டுக்கொண்டேன். அவர்களும் இசைந்திருக்கிறார்கள். ஆதலால் அதை எனக்கு விட்டு விடுங்கள். இத்தீர்மானங்களை நீங்கள் வாபீஸ் வாங்கிக்கொண்டதாகக் கருதுகிறேன். அனுமதியளியுங்கள்' என்று சொன்னார். தோழர் எஸ். ஆர். சுப்ரமணியம் முதலியவர்கள் தீர்மானத்தை வலியுறுத்தவில்லையென்று சொல்லிவிட்டார்கள்.

நிர்வாக சபையைப்பற்றிய விவாதம்

நிர்வாகசபையைப்பற்றி தூத்துக்குடி, பட்டுக்கோட்டை, சென்னை முதலியவைகளின் தோழர்கள் எழுந்து சில அங்கத்தினர்களைப்பற்றி குறைகூறி இன்றுவந்திருக்கிற ஜில்லா பிரதிநிதிகளுக்கு அனுமதி கொடுத்து கண்டிப்பான முறையில் தெரிந்தெடுக்கப்பட வேண்டுமென்றும் வேலைசெய்யாதவர்களையும், சிறைசெல்லப் பயந்துகொண்டு தந்திரம் பண்ணுகிறவர்களையும் மாற்றி உண்மையான கவலையும் கட்சிக்காக தன்னல மறுப்புடன் வேலை செய்து சிறைப்பட்டவர்களையும் ஆதரவு அளிப்பவர்களையும் தெரிந்தெடுக்க வேண்டுமென்று மிக ஆவேசமாகக் கேட்டுக் கொண்டார்கள். இதற்கு காரியதரிசி அண்ணாதுரையவர்கள் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்.

"இந்த வருஷம் ஜில்லா தாலூகா சபைகளை திருத்தியமைக்கப் போகிறபடியால் அதிலிருந்து தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டவர்களையே பெரும்பாலும் நிர்வாக சபையாக தெரிந்தெடுக்கப்படவேண்டும், மற்றபடி இதுவரை காலியேற்பட்டதின் மூலமாகவும் நியமனம் செய்யப்படவேண்டியதாகவும் ஏற்பட்ட அங்கத்தினர் பதவிகள் இன்றோடு காலியாக்கப்பட்டு விடுகின்றன. அந்த ஸ்தானங்களை தலைவரவர்கள் நியமன மூலமாக பூர்த்தி செய்யவேண்டும் என்கின்ற தீர்மானத்தைப் பிரேரேபிக்கிறேன்' என்று சொல்லி அதை தீர்மானமாக பிரேரேபித்தார். அதைத் தோழர் திருவொற்றியூர் சண்முகம் அவர்கள் ஆமோதிப்பதாகச் சொன்னார். தலைவர் தான் அதை பூர்த்தி செய்வார் என்று தோழர் பொன்னம்பலனார் எழுந்து உரத்த குரலில் அதை விளக்கிக்காட்டினார். பிறகு தலைவர் தீர்மானத்தை எடுத்துச் சொல்லி ஓட்டுக்கு விட்டார். இது ஏகமனதாக நிறைவேறிற்று.

ஜில்லா தாலூகாக்களில் ஸ்தாபன அமைப்பு வேலைக்கு பொறுப்பாளர்கள்

மேலே குறிப்பிட்டபடி அங்கத்தினர்களை சேர்க்கவும் ஜில்லா தாலூகாக்களில் புதுத்தேர்தல் நடத்தி கழகங்களைப் புதுப்பிக்கவும் பொறுப்பு எடுத்துக்கொள்ளும்படி கீழ்க்கண்ட தோழர்களை மண்டல அமைப்பு தலைவர்களாகவும் மாநாடு வேண்டிக்கொள்ளுகிறது.

திருநெல்வேலி, இராமனாதபுரம், மதுரை ஆகிய மூன்று ஜில்லாக்களுக்கு மதுரை ஜில்லா போர்டுதலைவர் தோழர் பாண்டியன் அவர்களும்,

திருச்சி, தஞ்சை, தென்னார்க்காடு ஆகிய மூன்று ஜில்லாக்களுக்கு கும்பகோணம் தோழர் கே. கே. நீலமேகம் அவர்களும்,

வடஆர்க்காடு, சென்னை, செங்கற்பட்டு ஆகிய ஜில்லாக்களுக்கு செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவர் திருவற்றியூர் டி. சண்முகம் அவர்களும்,

சேலம், கோயமுத்தூர், நீலகிரி ஆகிய ஜில்லாக்களுக்கு தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களும்,

ஆக நான்கு பேர்களும் மேற்பார்வையாளர்களாகவிருந்து பொறுப்பெடுத்துக் கொண்டு நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் படுகிறது.

அவர்களும் ஒப்புக்கொண்டார்கள். இதை தோழர் எஸ். ஆர். சுப்பிரமணியம் ஆமோதித்தார்.

ஏகமனதாக நிறைவேறிற்று.

ரோஜா முத்தையா

# இராசிபுரம் திராவிடர் மாநாடு

22—8—44 ஆந்தேதியில் இராசிபுரத்தில் தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இராசிபுரம் தாலுகா திராவிடர் மாநாட்டின் வரவேற்புக்கழகத் தலைவர் தோழர் பெ. அ. சித்தப்பா அவர்கள் ஆற்றிய வரவேற்புரை வருமாறு,—

திராவிட நாட்டின் தனிப்பெருந் தலைவர் பெரியார் அவர்களே! தன்மான இயக்க தளபதிகளே! மற்றுமுள்ள தோழர்களே! தாய்மார்களே!

திராவிடநாடு திராவிடருக்கே ஆக்க வேண்டும் என்ற ஆசையுள்ள திராவிட தொண்டர்களாகிய எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி இம்மாநாட்டுக்கு வந்து கூடியுள்ள உங்கள் அனைவருக்கும் வரவேற்புக் கமிட்டியின் சார்பாக எனது மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு அன்புடன் வரவேற்கின்றேன்.

சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்குமுன் தமது தீராத வறுமையினைத் தீர்த்துக் கொள்ளுவான் வேண்டி ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டு பெண்டு பிள்ளைகளுடன் நாடோடிகளாக நம் நாட்டில் குடியேறிய ஆரியர்கள் கடவுளின் பெயராலும், மதத்தின் பெயராலும், சாஸ்திரத்தின் பெயராலும் பொய் புராணங்களை கற்பனை செய்து மக்களுள் உயர்வு தாழ்வு கற்பித்து பாவ புண்ணியம், நரக மோக்ஷம், என்னும் பயங்காட்டி மக்களை ஏமாற்றி வயிறு வளர்த்துக்கொண்டு வந்தவர்களின் ஆதிக்கம் சற்சமயம் கோயிலில் மணியடிக்கும் பூசாரி வேலையிலிருந்து அரசாங்க மந்திரிப் பதவி வரையில் எட்டிவிட்டபடியால் விழித்தெழுந்த தமிழர்கள் "திராவிடநாடு திராவிடருக்கே" ஆக்கவேண்டியது எவ்வளவு அவசியமும் அவசரமும் ஆகும் என்பதை உணர்ந்து கொண்டார்கள்.

இது எங்கள் திராவிடநாடு; கோவில்கள் கட்டியது திராவிடர்கள்; பணம் செலவழித்ததும் திராவிடர்கள்; மான்யம் விட்டதும் திராவிடர்கள்; அவைகளின் உள்ளிருக்கும் சிலைகளும் திராவிடநாட்டுக் கல். அவைகளை செதுக்கியவர்களும் திராவிடநாட்டு சிற்பிகளே. இப்படியிருக்க நம்மை உள்ளே நுழைய விடாமல் தடுக்கக் கூலிக்குப் பூசை செய்யும் கூட்டத்திற்கு என்ன உரிமையிருக்கிறது? திராவிடநாட்டுக் கோவிலில் உள்ள கடவுளுக்கு திராவிடமொழி தெரியாமல் குறுக்கே நிற்கும் நாசர்கள் அர்ச்சிக்கும் வடமொழியாகிய மந்திரத்தை மட்டும் புரிந்துகொள்ளுகிறதென்றால் எந்த பகுத்தறிவுள்ளவர்கள் தான் ஒப்புக்கொள்ள முடியும்?

தம்மைத் தாமே தெய்வமென்றும், தெய்வத் தரகர்களென்றும், பிதுர்பார்சல் கிளார்க்குகளென்றும், தம்மூலமாகத் தான் கடவுளுக்கும், பிதுர்களுக்கும், யாவும் போய் சேரவேண்டுமென்றும் பல வழிகளிலும் தக்ஷணை, தானம், என்ற பெயர்களால் நம்மை ஏமாற்றி பணம், பொருள் பல பறித்து ஊரார் தயவில் உண்டு வாழும் சிறு கூட்டம் செய்ந்நன்றி மறந்து நம்மையே சூத்திரன், தீண்டப்படாதவன், நெருங்கப்படாதவன், பார்க்கப்படாதவன் என்று பல துறைகளிலும் தாழ்மைப்படுத்தி வருவதை இன்னும் எத்தனை நாளைக்கு ரோஷம், மானம், இல்லாமல் ஆரிய அடிமைகளாக இருக்க பகுத்தறிவுள்ள தமிழர்கள் சகித்துக்கொண்டிருக்க முடியும் என்று கேட்கின்றேன்.

இத்தகைய நியாயமும் பொருத்தமுமான கேள்விகளைக் கேட்டால் சுயமரியாதைக்காரர்களின் மேல் குறைகூற பார்ப்பனர்களும், புராணீகர்களும், வைதீகர்களும் முன்வந்துவிடுகிறார்கள். உள்ளதைச் சொன்னால் உடம்பெரிச்சல் படுவானேன்! பார்ப்பனர்களின் மேலோ, புராணீகர்களின் மேலோ, வைதீகர்களின் மேலோ எங்களுக்கு தனிப்பட்ட முறையில் வெறுப்போ, துவேஷமோ கிடையாது. ஆனால் பார்ப்பனீயம், புராணீயம், வைதீகம் முதலியவைகளை அடியோடு அழித்தொழித்துவிடுவதென நம் தலைவர்கள் கங்கணங்கட்டிப் போர் தொடுக்க ஆரம்பித்து விட்டார்கள்.

இது நாள் வரை திராவிடர்களுக்கு இழைத்த கொடுமைகள் அம்பலமாக்கப்பட்டு அதன் சதிசெயல்கள் வெளியாக்கப்பட்டு சந்தி சிரிக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. புனிதமானது, புலமை நிறைந்தது, என்று பூசிக்கப்பட்ட ஏடுகள் இன்று பகுத்தறிவு ஆராய்ச்சி என்னும் ஞானவெளியில் பறக்கின்றன. அவைகளிலே புதைந்து கிடந்த கருத்துக்கள் பகுத்தறிவுக்காரர்களின் கண்டனத்துக்கும் கேலிக்கும் ஆளாகி அவதிப்படுகின்றன. புராணப் பிரசங்கிகளின் பாடு கொண்டாட்டமாயிருந்த காலம் போய் திண்டாட்டமான காலமாய் விட்டது. இவ்விதமான எழுச்சி மிக்க நேரமிது; ஆர்வம் கொழுந்துவிட்டெரியும் காலமிது; விடுதலை நம்மை கிட்டவரும் காலமிது; நெட்டுருப் புலவர்களுக்கும், பட்டைப்பூச்சணிவோர்களுக்கும் பயந்திருந்த காலமல்ல: பார்ப்பானை சாமியென்று பணிந்திருந்த காலமுமல்ல; மோக்ஷ நரகமென்ற பொய்யுரைக்கு மருண்டிருந்த காலமுமல்ல. இது பகுத்தறிவுக் காலம்.

நம்மிடமிருந்து பிச்சை வாங்கிப் பிழைப்பதையே தொழிலாகவுடைய ஆரியர்கள் நம் சகோதரர்களை நாம் கட்டிய கோவில்களில் புகக்கூடாது, நமக்கு சொந்தமான குளம் கிணறுகளில் இறங்கக் கூடாது, ஆரியர்கள் வாழும் அக்ரகாரம் என்னும் தெருவில் நடக்கவும் கூடாது என்று தடுக்கும் கொடுமைகளை ஒழிக்க திராவிடநாடு பிரிந்தால் தான் முடியுமென்பதை நான் ஆதிதிராவிடத் தோழர்களுக்கு சொல்ல ஆசைப்படுகின்றேன்.

நம் நாட்டு சகல கைத்தொழில்களும் வளர்ச்சியடையவும், தென்னாட்டுத்தொழிலாளிகளின் உழைப்பின் பயன் வடநாட்டு முதலாளியின் சேமிப்பு நிதியாகப் போவதைத் தடுக்கவும், ஒரு தொழிலாளி பரம்பரைத் தொழிலாளியாகவும், ஒரு முதலாளி என்றும் முதலாளியாகவும் இருக்கவிடாமல் தொழிலாளி முதலாளியாக ஆகவும், முதலாளி தொழிலாளியாக மாறவும் அவரவர்களின் உழைப்புக்குத் தக்கபடி மாற்றங்கள் அடையவும், வேண்டுமானால் திராவிடநாடு பிரிந்தேயாகவேண்டும் என்பதை சகல தொழிலாளர்களுக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

முஸ்லீம் சகோதரர்களே! நீங்களெல்லாம் முன்காலத்தில் திராவிடர்களாயிருந்து மதம் மாறி இஸ்லாம் ஆனவர்களேயல்லாமல், அரேபியாவிலிருந்து இவ்விடம் வந்து குடியேறியவர்கள் அல்ல என்பது மறுக்க முடியாத உண்மை. அந்தக்காரணத்தினாலே திராவிட நாட்டுப் பிரிவினையில் தாங்களும் பங்கெடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்ற உணர்ச்சியினாலே திராவிட நாட்டிலுள்ள நமது முஸ்லிம் இளைஞர்களும் வடக்கே பாகிஸ்தான் பிரிவினைக்காகப் பாடுபடும் காயிதே ஆஜம் முகமதலி ஜின்னா அவர்களை தலைவர்களாகவும் தெற்கே திராவிடஸ்தான் பிரிவினைக்காகப் பாடுபடும் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களைத் தலைவர்களாகவும் ஏற்றுக் கொண்டு தம் உரிமைகளையடைய வீர

---

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ரித்தார்கள். தோழர் சண்முகம் அவர்கள் பேசும்போது, தோழர்கள் பாலசுப்பிரமணியம், விசுவநாதம் ஆகியவர்கள் பேசியபடி நடந்துகொள்ளவேண்டும் என்றும் அவர் பேசிய பேச்சை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுகிறார்களா அல்லது தங்கள் வழக்கம் போல் நடக்கிறார்களா பார்ப்போம் என்றும் வெளியில் போனதும் பழையபடி கர்ணம் போடக்கூடாதென்றும் எச்சரிக்கை செய்து, யார் தானாகட்டும் இந்நிலையில் பெரியாரைத் தவிர வேறு யார் பெயரை பிரேரேபிக்கத் தயாராயிருக்கிறீர்கள் என்று கேட்டுவிட்டு ஆதரித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

பின், பெரிய ஆரவாரத்துடனும், வாழ்த்தொலியுடனும், நீண்ட கைத்தட்டலுடனும் பெரியார் நீண்ட சொற்பொழிவாற்றினார் (தொடர்ச்சி மற்றொரு பக்கம்) (பேச்சு பின்னர் வரும்)

மூடன் வாத்தியாராயிருப்பதைக் கண்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

"வெள்ளையனே வெளியே போ" அர்த்தமற்ற பேடித்தனமான சொல்லை ஆதரித்த தேசியத் தோழர்களே! வெள்ளையனைக் காட்டிலும் நம்செல்வத்தைக் கொள்ளை கொண்டு போகும் வடநாட்டு மார்வாடிகளையும், உள்நாட்டில் ஊரார் உழைப்பில் உண்டு வாழ்ந்து கொண்டு எதிரிக்குக் காட்டிக்கொடுக்கும் ஆரியர்களையும் முதலில் வெளியேற்றினாலல்லவா நமது மொழி, கலை, இனம், தொழில், பொருளாதாரம், பெண்ணுரிமை, சமத்துவம், சகோதரத்துவம் முதலியவைகளைக் காக்க முடியும் என்ற உறுதியைக்கொண்டே திராவிட நாட்டைப் பிரிக்க அறப்போர் தொடுக்க ஆயத்தம் செய்கிறோம். அதன்பின் ஆங்கிலேயரிடத்திலிருந்து சுதந்திரம்பெற தேசியத் தோழர்களாகிய உங்களைக் காட்டிலும் நாம் முன்னணியில் நிற்போமென்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

தேசியத் தோழர்களுக்கு எந்த விஷயத்திலும் ஆரம்பத்தில் தெளிவு ஏற்படுவதில்லை என்பதற்காகவே இதை வற்புறுத்திக் கூறுகின்றேன். உதாரணமாகக் கூறவேண்டுமென்றால் முன்னாளிலே வடநாட்டை அரசாண்டு ஆங்கிலேயர் வரவால் அரசிழந்து காங்கரசின் கிளர்ச்சியால் வகுப்பு வாதிகளென்றும் தேசத்துரோகிகளென்றும் தூற்றப்பட்டு வந்த முஸ்லிம்களின் பாகிஸ்தான் கிளர்ச்சியைப் பரிகாசம் செய்தும், பாதகமானதென்று பழியுரைத்தும், பிடிவாதம் பேசி வந்த காங்கிரஸே இன்று பாகிஸ்தானுக்கு எல்லையென்னவென்று ஜின்னா மாளிகைக்கு வலிய சென்று கேட்கும்படியான தெளிவு உண்டாயிருப்பதைக் காணலாம்.

திராவிடத் தோழர்களே! இதைக் கண்ட பிறகாவது திராவிடநாடு தனிநாடாவதற்குத் தளராதுழைத்துத் தக்க வழி வகுத்துவரும் தலைவர் பெரியார் அவர்கள் வழி நின்று, மொழிகேட்டு, இல்லை அதிகாரம் பெறுவது என்கிற சபலத்தை விட்டு ஒருமுகமாக நின்று பணி புரிந்தால் காங்கிரஸை ஈரோட்டுக்குத் தானாக வரும்படி செய்ய முடியாதா என்றுகேட்கின்றேன். திராவிடநாடுதனி நாடாவது என்ற திட்டம் சம்பிரதாய அரசியலாலோ, சட்டசபை பிரவேசத்தாலோ சாதிக்கக்கூடியதல்ல என்பதும், இன எழுச்சியும், மக்கள் விழிப்பும், லக்ஷியத்தை அடைவதாக கஷ்ட நஷ்டத்தை ஏற்றுக்கொள்ளும் தன்மையும் நமது மக்களுக்கு உண்டாகி ஒரு புரட்சி வேகம் ஏற்பட்டால் மட்டுமே அடையக் கூடியது என்பதும் வரலாறு அறிந்தோர் அறிவர். இத்தகைய எழுச்சியை ஊட்டக்கூடிய தலைவர் பெரியார் அவர்கள் ஒருவரே நீண்ட காலமாக எதிர்பார்த்துக் கடைசியில் இம்மாதம் 27-ந்தேதிக்கு ஒத்திவைத்துள்ள நம்முடைய மாகாண மாநாடு சேலத்தில் நடைபெறப்போகிறது. அங்கே பெரியார் அவர்களுடைய பின்பலமாக நின்று அவர் காட்டும் வழி நடந்தால் திராவிடநாடு நிச்சயம் பெறுவோமென்று மகிழ்ச்சியோடு உறுதி கூறுகின்றேன்.

வாழ்க திராவிடநாடு!

வாழ்க பெரியார்!

---

நாகை தன்மதிப்புக் கழகம், திராவிடர்க்கழகம் கட்டிட நிதிக்காக 10-9-44 ஞாயிற்றுக்கிழமை நாகை ராபின்சன் ஹாலில்

பெரியார் ஈ. வெ. ரா அவர்கள் தலைமையில், நாகை திராவிட நடிகர் கழகத்தாரால்

## அன்பானந்தன்

அல்லது

## சமூக வெற்றி (போர்வாள்)

என்னும் நாடகம் நடத்தப்படும்.

எ. என். தங்கவேல்,
செயலாளர்.
ஆர் வி. கோபால்,
தலைவர்.
நாகை திராவிடநடிகர் கழகம்.

---

## திருமணம்

போடி நாயக்கன்பட்டி தோழர் பொன்ரெங் சாமி நாயுடு அவர்கள் மகன் தோழர் பி கொண்டல் வண்ணனுக்கும் திருப்பத்தூர் தோழர் சா. பாலகிருஷ்ண நாயுடுமகள் தோழர் தனம் அம்மாளுக்கும் போடிநாயக்கன்பட்டி (வாடிப்பட்டி) யில் மணமகள் இல்லத்தில் 4-9-44-ந் தேதி 10 மணிக்கு மேல் திருமணம் நடைபெறும்.

## வருந்துகிறோம்

திருச்சி, பாலக்கரை மஞ்சனக்காரத்தெரு பகுத்தறிவு நிலைய ஸ்தாபகரும், தலைவருமான தோழர் வெ. குருநாதம் அவர்கள் 18-8-44 தேதி இயற்கை யெய்தினார் என்பதை அறிய வருந்துகிறோம். அன்னாரின் நினைவுநாள் அவர் மருமகன் தோழர் கே. என்.வாசன் அவர்களால் 2-9-44ல் மேடி நிலையத்தில் கொண்டாடப்படும்.

## ரிஜிஸ்டர் திருமணம்

4-9-44-ஆந் தேதி காலை 6 மணிக்கு மேல் ஈரோடு ஆச்சியிலிருந்தில் தோழர்கள் ருக்மணி—வேதநாயகன் வாழ்க்கைத்துணை ஒப்பந்தம் நடைபெறும்.

திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி, தோழர்கள் சி. என். அண்ணாதுரை, என். எஸ். கிருஷ்ணன், வித்வான் கண்ணப்பன், சரசுவதி முதலானவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

என். பழனியப்ப பிள்ளை,
பி. ஷண்முக வேலாயுதம்.

## புரசைத் திருவள்ளுவர் கழகம், புரசை சென்னை

மேடி கழகச்சார்பில் 27-8-44ல் தொடங்கி வாரந்தோறும் திரிசிரபுரம் தமிழ் மறைத்தொண்டர், குறள், வி. முனிசாமிப் பிள்ளை பி. ஏ. சென்னை புரசை வைக்கோற்காரன் தெருவிலுள்ள நகராண்மைக் கழக ஆண் பாடசாலையில் காலை 11 மணி முதல் 12 மணிவரை சொற்பொழிவாற்றி வருகிறார்.

## செங்குந்தர் மகாஜன சங்கம்

27-வது மாநாடு பெருந்துறையில் 8, 9-9-44ல் நடைபெறும். சங்கத்தில் சேர்ந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் சங்கத் திட்டங்களுக்குக் கட்டுப்படுவதாக விண்ணப்பங்களை சங்கக் காரியதரிசிக்கு முன்னாடியே செய்து கொண்டு 7-9-44 ஆந்தேதி மாலை பெருந்துறையில் கூடும் நிர்வாகக் கமிட்டிக்கு ஆஜராக வேண்டும்.

---

சிதம்பரம்: 21-8-44 மாலை கூடிய திராவிடர் கழகத்தின் அவசரக் கூட்டத்தில் செயற்குழுவினரான ஓ. ராஜகோபாலன் விலகிக்கொள்ள கோரியபடி அனுமதிக்கப்பட்டு அந்த இடத்துக்கு தோழர் சங்கையயா நாடார் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சேலம் மாநாட்டுக்கு சிதம்பரம் பிரதிநிதிகளாக தோழர்கள் ஜே. பத்மநாபன், ஏ. எம். சாமிநாதன், எம். கே. சுந்தரம், கே. டி. பழமலை பிள்ளை, சங்கையயா நாடார், தம்பையா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

---

Edited Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press. 42, Cutchery Street, Erode.

ரோஜா முத்தையா